பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை 31.10.2017 கதிர் 359

## இளவாலைப் பகுதியில் அடித்துக் கொலை

இளவாலைப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பகுதியில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஐம்பது வயதுடைய இந்த நபருக்கு, இளவாலைப் பகுதியைச் சேர்ந்த திருமணமான பெண் ஒருவருடன் தொடர்பு இருந்துள்ளதாக தெரிகிறது. அதனை அறிந்த அப் பெண்ணின்

பக்கம் 18

# தமிழ் மக்களின் ஆணையை கூட்டமைப்பு மீறுகிறதுதான்!

## சபையில் ஒப்புக்கொள்கிறார் சுமந்திரன்

கொழும்பு, ஒக்ரோபர் 31


“ஒன்றுபட்ட வடக்கு – கிழக் கில் சமஷ்டி முறையில், மதசார் பற்ற ஒரு தீர்வுக்கே எமது மக்கள் எமக்கு ஆணை தந்தார்கள். அந்த ஆணையை நாங்கள் மீறிச் செயற்படுகின்றோம் என்று எமது மக்களே எங்களைக் குற்றம் சொல்கின்றார்கள். அது உண்மையே. எனினும் எல்லாத் தரப்பும் இணங்கக்கூடிய ஒரு தீர்வை எட்டுவதற்காக நாம் இறங்கிவர முயற்சிக்கின்றோம். அத்தகைய இணக்கத் தீர்வை எட்டினால் அதனை எமது மக்கள் முன் வைத்து அவர்களின் அனுமதியைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதனடிப்படையிலேயே இந்த விடயத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம்.”

– இவ்வாறு நேற்று அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் தெரிவித்தார் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பி.யுமான சுமந்திரன்.

பக்கம் 18

## காரைப் பந்தாடிய ரயில்; 2 சப். இன்ஸ்பெக்டர்கள் சாவு!

### அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள்



கொழும்பு, ஒக்.31

நேற்று மாலை அம்பலாங்கொடை– ஆந்தாசல ரயில்வே கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதியதில் காரில் பயணித்த விசேட அதிரடிப்படையின் இரண்டு சப். இன்ஸ்பெக்டர்கள் உயிரிழந்தனர்.

பக்கம் 18

## கூட்டமைப்பில் இருந்து வெளியேறுகிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

தமிழ்தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தமது கட்சி தனித்து போட்டியிடுவதற்கு தயாராகி வருவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் – கடந்த 15 வருடங்களாக தனது கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு இணைந்து செயற்பட்ட நிலையில், கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசு கட்சி ஏனைய கட்சிகளின் கருத்துக்களை மதிப்பளிக்காது செயற்படுவதோடு மக்களின் அபிலாசைகளுக்கு மாறாக செயற்படுவதால் தனது கட்சி இத்தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்

பக்கம் 18

## மினி பஸ் – ரயில் மோதியதில் 2 பெண்கள் சாவு; 13 பேர் காயம்

மீட்டியாகொடை பகுதியில் நேற்று மினிபஸ் ஒன்று ரயிலுடன் மோதுண்டதில் பெண்கள் இருவர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்த நிலையில் பலபிட்டி வைத்தியசாலையில் சேர்க்

பக்கம் 18

# கூட்டமைப்புக்கு மாற்று அணி; பேச்சுகளில் இணக்க நிலை!

## கொழும்பில் முதலீடு செய்த அளவு புலம் பெயர் தமிழர்கள் வடக்கில் முதலிடவில்லை!

### இந்தியக் கூட்டத்தில் மஹிந்த தெரிவிப்பு

அவுரங்காபிஷ், ஒக்.31

தென்னிலங்கையில் – கொழும்பில் – அடுக்குமாடிக் கட்டடங்களில் பெருமளவு நிதியை முதலீடு செய்யும் வெளிநாட்டுத் தமிழர்கள் வடக்கு, கிழக்கில் போதுமான முதலீடுகளைச் செய்கிறார்கள்

பக்கம் 18

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். களம் இறங்கும்

### தமிழ் மக்கள் பேரவையின் ஆசீர்வாதமும் உண்டாம்

யாழ்ப்பாணம், ஒக்.31

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக ஓர் அணியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரில் இறக்குவதற்கான பூர்வாங்கப் பேச்சுகள் வெற்றியளித்திருக் கின்றன என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பெயரில், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இணைந்து களமிறங்கும்

பக்கம் 18

### அ’புரச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும்

## கைதிகளின் மீளாய்வு மனுவுக்காக நீதிமன்றில் ஆஜராக எவருமில்லை

கொழும்பு, ஒக்.31

தங்களின் வழக்கு களை மீண்டும் வவுனியா மேல் நீதி மன்றத்துக்கு மாற்றும்படி கோரி அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் மீளாய்வு மனு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுதாரர்கள் சார்பில் எவரும் முன்னிலையாகாத நிலையில் மனுத் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கைவிடப்பட்டது.

மேன்முறையீட்டு நீதி

பக்கம் 18

### தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக

## யாழ்.பல்கலைக்கழகத்தை இழுத்து மூடிப் போராட்டம்

தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு உரிய தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கோரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகம் நேற்று முதல் கால வரையறையற்ற கதவடைப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதன்படி நேற்றிலிருந்து பல்கலைக்கழக

பக்கம் 18



## கைதிகளின் நிலை தொடர்ந்து மோசம்

அநுராதபுரம், ஒக்.31

அநுராதபுரம் சிறைச் சாலையில் கடந்த ஐந்து வாரங்களாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் மூன்று அரசியல் கைதிகளில் ஒருவரான இராஜதுரை திருவருள் நேற்று மிகவும் பலவீனமுற்ற நிலையில் மீண்டும் சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

பக்கம் 18

## டக்ளஸ் மீதான தாக்குதல்: 6 பேருக்குக் கடூழியச் சிறை!

### அவர்கள் எவரும் நீதிமன்றுக்கு வரவில்லை

கொழும்பு, ஒக்.31

ஈ.பி.டி.பியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மீது களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்துத் தாக்குதல் நடத்திய வழக்கில் ஆறு எதிரிகளுக்கு தலா பத்தரை

பக்கம் 18

## தம்மைத் தாக்கியோருக்கு மன்னிப்பு வழங்குமாறு கோருகின்றார் டக்ளஸ்

கொழும்பு, ஒக்.31

களுத்துறை சிறைச் சாலையில் தன்மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தின் போது குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என்று ஈழ மக்கள்

பக்கம் 18

# நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறினார் எதிர்க்கட்சி தலைவர்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு!



எதிர்க்கட்சித் தலைவர் தனது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுகிறார் என குற்றம் சாட்டியுள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இது குறித்து சபாநாயகரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புக்கான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் ஒக்ரோபர் மாதம் 30, 31 மற்றும் நவம்பர் முதலாம்ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இதில் கலந்துகொண்டு தமது கருத்தைத் தெரிவிப்பதற்குத் தமக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான ந.சிவசக்தி ஆனந்தன் எதிர்க்கட்சித் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருப்பினும் உங்களுக்கான நேர ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற குழுவில்தான் முடிவெடுக்க வேண்டும் என்று இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இது வரை காலமும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நாடாளுமன்றக் குழுவில் முடிவெடுப்பதில்லை. இம்முறை எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு அறிவித்துள்ளமை எமக்கு அதிர்ச்சிய ளிக்கிறது.

நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் குறியீடாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியையும் சேர்த்து நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இடைக்கால அறிக்கை தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காகவே நாம் நேரம் ஒதுக்கித்தருமாறு வேண்டினோம். ஆனால் எமது கருத்து ஏற்கப்படவில்லை.

வன்னி உட்பட வடக்கு-கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காகவும் அதன் ஒற்றுமையைக் கட்டிக்காப்பதற்காகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அளப்பரிய பங்காற்றியுள்ளது.

கூட்டமைப்பிற்கு வெளியில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளையும் இதில் இணைத்துக்கொள்வதிலும் அது தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

மேற்கண்ட எமது செயற்பாடுகளை அங்கீகரிக்கும் வகையிலும் எமது மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து விலகாமலும் அவர்களுக்கு என்னால் முடிந்த சேவைகளை ஆற்றி வருவதினாலுமே வன்னி மக்களின் பூரண ஆதரவுடன் தொடர்ந்தும் நான்கு முறை நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறேன்.

அவர்களின் கருத்துக்களையும் எமது கட்சியின் நிலைப்பாட்டையும் தெரிவிப்பது எமது உரிமையும் கடமையுமாகும். எமது அந்த ஜனநாயகக் கடமையைச் செய்ய விடாமல் தடுப்பது எமது அடிப்படை உரிமையை மீறுவதாகும்.

மேலும் எமது மக்களை அவமதிக்கின்ற செயலாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவரின் இச்செயல் தமிழரசுக் கட்சியின் அராஜகப் போக்கையும் அதன் எதேச்சாதிகாரப் போக்கையும் நிரூபிப்பதாகவே அமைந்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் இச் செயல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறுவதாகவும் அமைந்துள்ளது. எதிர்க் கட்சித் தலைவரின் கருத்தை நாம் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளோம். சபாநாயகர் ஜனநாயகத்தை நிலைநாட்டி எமக்கான உரிமையை வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இத்தகைய அராஜகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க- 100)

## கடவுச் சீட்டை ஒப்படைக்குமாறு மஹிந்தானந்தவுக்கு உத்தரவு

கொழும்பு, ஒக்.31

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு முதன்மை நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தானந்த அளுத்கம கேவின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இதற்கு முன்னர் உத்தரவிடப்பட்டிருந்தது, எனினும் கடவுச்சீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மீண்டும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தானந்த அளுத்கமகே விளையாட்டுத்துறை அமைச்சராகச் செயற்பட்ட போது, பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட கரம் பலகை மற்றும் டாம் பலகைகளை வேறு நபர்களுக்கு வழங்கினார் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆடைத் தொழிற்சாலை பஸ் பால் பவுசருடன் மோதி விபத்து

### ஓமந்தையில் சம்பவம்; 24 பேர் காயம்!




வவுனியா, ஒக். 31

வவுனியா, ஓமந்தை, ஏ9 வீதியில் ஆடைத்தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றி வந்த பஸ் பால் பவுசருடன் மோதி விபத்துக்குள்ளானதில் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.10 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

வவுனியா, இராசேந்திரகுளம் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றி வந்த பஸ் ஓமந்தை, பன்றிக் கெய்த குளம் பகுதியில் பயணித்த போது எதிர்த் திசையில் முல்லைத் தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த பால் பவுசருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் அந்த பஸ்ஸில் பயணித்த 24 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

(க- 100)

## அரச வாகனத்தைத் துஷ்பிரயோகம் செய்தமை:

## கருணா விடுவிப்பு

கொழும்பு, ஒக்.31

அரச வாகனத்தை தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலிருந்து முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்த போது, அவரது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட துப்பாக்கி குண்டுதுளைக்காத அரச வாகனத்தை மீளளிக்காமை தொடர்பான குற்றச்சாட்டில், கருணா அம்மான் கைதுசெய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நேற்று மீண்டும் இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கைத் தொடர்ந்து மேற்கொள்ளாதிருக்குமாறு, சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினர்.

இதற்கமைய, சந்தேகநபரை விடுவிக்குமாறும் அவர்கள் கோரினர்.

விடயங்களை ஆராய்ந்த பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார, இந்த வழக்கில் இருந்து கருணாவை விடுவிக்க உத்தரவிட்டார்.



(உ)

# பன, தென்னையிலிருந்து கள் சீவுவதற்கு தடையா?

## தவறான விளக்கம் என்கிறார் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.



கொழும்பு, ஒக்.31

பனைமற்றும்தென்னைமரங்களிலிருந்துகள் இறக்குவதுதடை என்ற ரீதியில் தற்போது ஊடகங்கள்செய்திகளை வெளியிட்டுவருகின்ற நிலையில், இவ்விடயத்துடன் தொடர்பான மதுவரிக் கட்டளைச்சட்டத்தின்52ஆவது அத்தியாயத்தின் திருத்தமானது, தவறானது என்றும் தெளிவற்றதென்றும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில்மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர் –

மேற்படி கட்டளைச் சட்டத்தின் 52ஆவது அத்தியாயத்தின் (ஆ) பிரிவில், 'கித்துள் மரத்தைத் தவிர, கள்ளை உற்பத்தி செய்யும் மரம் எதிலும் கள்ளிறக்கப்படுதலாகாது' என்றும், (ஒ) பிரிவில், 'கித்துள் மரத் தைத் தவிர, வேறு ஏதேனும் மரத்திலிருந்து கள்ளு எடுக்கப்படுதல் அல்லது கீழிறக்கப்படுதல் ஆகாது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே அத்தியாயத்தின் சிங்கள மொழி மூலமான (ஆ) பிரிவில் 'கித்துள் மரம் தவிர்ந்த கள் உற்பத்தி செய் யப்படும் எவ்விதமானமரங்களிலிருந்தும்சீவல் செயற்பாடுகள் செய்யக்கூடாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்பதாக இதே அத்தியாயத்தில் இதே பிரிவுகளில் 'கித்துள், பனை, தென்னை தவிர்ந்த ஏனைய மரங்களிலிருந்து கள் ளிறக்கப்படுதலாகாது' என்றே குறிப்பிடப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளைத்தொடர்புகொண்டு கேட்டபோது, பனை மற்றும் தென்னை மரங்களில் கள் உற்பத்திமேற்கொள்வதற்குஅனுமதிப் பத்திர முறைமையை மீண்டும் கொண்டுவரும் நோக்கத்திலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் இருந்து பார்க்கின்ற போது, மேற்படி கட்டளைச் சட்டத் திருத்தமானது தவறானதும், தெளிவற்றதுமாகவே காணப்படுகின்றது.

இந்த நிலையில் எமது மக்களில் பெருந்தொகை யினரின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்குகின்ற மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடன் கலந்துரையாடி, மேற்படி தொழிற்துறையை இலகுவாக்குவதற்காகவும், எமது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் மாற்றியமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார் டக்களஸ் தேவானந்தா. (உ)

# 'தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள்' கிளிநொச்சியில் புதிய கட்சி நேற்று உதயம்





தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள் என்ற பெயரிலான புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு, கிளிநொச்சியில் உள்ள பாரதி தனியார் விடுதியில், நேற்று நடைபெற்றது. இரண்டு மாவீரர்களின் தாயொருவர் சுடரேற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சுந்தரம்பிள்ளை சிவகுமார், செயலாளர் கணேசன் பிரபாகரன் ஆகியோர் விளக்கேற்றி, நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

ஏற்கனவே முன்னாள் போராளிகளினால், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்ற ஒரு கட்சி ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்ற நிலையில், இப்போது புதிதாக, தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள் கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

### அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய

# சர்வ கட்சி, சர்வ மத, புத்திஜீவிகள் என முத்தரப்பினரும் பங்குபற்றும் மாநாடுகள்

புதிய அரசமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் அங்கத்துவத்துடனான சர்வகட்சி மற்றும் மதத்தலைவர்கள் உள்ளடங்கிய சர்வமத மாநாடு, புத்திஜீவிகளின் மாநாடு ஆகியன நடத்தப்படவுள்ளன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசமைப்பு தொடர்பாக காணப்படும் சில தவறான அபிப்பிராயங்களை நீக்கும் பொருட்டு எதிர் காலத்தில் 3 படிமுறைகளை நடைமுறைப்படுத்தத்தாம்எதிர்பார்க்கின்றார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்கேற்பநாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகலரது பங்குபற்றுதலுடன் சர்வ கட்சி மாநாட்டை நடத்துதல், சர்வ சமய தலைவர்களின் பங்குபற்றுதலுடன் சர்வ மத மாநாட்டை நடத்துதல் மற்றும் இவ்விடயத்தில் ஆர்வத்துடன் செயற்படும் நாட்டின் கல்விமான்களினதும் புத்திஜீவிகளினதும் மாநாட்டை நடத்துதல் ஆகியனவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதன்மூலமாக முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசமைப்பு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு, விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டு, மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதன் ஊடாக பிரச்சினைகளைத்தீர்க்கமுடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கொழும்பு, சுகததாசஉள்ளகவிளையாட்டரங்கில்நடைபெற்றசகவாழ்வுஅமைப்புக்கள் மற்றும் தேசியசிவில்சமூக செயற்பாட்டாளர்களின் சந்திப்பிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### ஜனாதிபதி அறிவிப்பு

அணிகளாக ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதனால் மாத்திரம் நாட்டில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, பிரிவினை மற்றும் வேற்றுமையினால் மக்களையும் நாட்டையும் வெற்றிகொள்ள முடியாத, அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பல பிரச்சினைகளையும் சிக்கலாக்கும்முயற்சிப்பவர்களுக்குஅவற்றைத் தீர்ப்பதற்கான ஆற்றல் கிடையாது. ஒரே மேசையில் அமர்ந்து நாட்டைப் பற்றிய உண்மையான சிந்தனையுடன் சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாட மகா சங்கத்தினருக்கும், ஏனைய சமயத் தலைவர்களுக்கும், புத்திஜீவிகள் மற்றும் கல்விமான்களுக்கும் தான் அழைப்பு விடுக்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மீண்டும் ஒரு முறை நாட்டில் வெடிச்சத்தங்கள் கேட்காமலிருக்கும் வண்ணம்செயற்படவேண்டியது அனைவரதும் கடமையாகும் என்பதுடன் நியாயமான சமூகமொன்றில்சகலரது பொருளாதார நிலையையும் கட்டியெழுப்புவதற்கானபொறுப்பினைநிறைவேற்றுவதற்கு சகலரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வண. மஹகல்கடவர புண்ணியசார நாயக்கதேரர்உள்ளிட்ட மகா சங்கத்தினரும், சர்வ மத தலைவர்களும், அமைச்சர் மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், தூதுவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட புத்திஜீவிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# புதிய அரசமைப்பு வேண்டாம் உள்ளதைத் திருத்துங்கள்!

### அமரபுர மகாநாயக்கர்கள் வேண்டுகோள்

கொழும்பு,ஒக்.31

புதிய அரசமைப்பு உருவாக்கு வதைத்தவிர்த்து,உள்ள அரசமைப்பில் போதிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அமரபுரமகாநாயக்கர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விசேட ஊடக அறிக்கையொன்றின்மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில் பௌத்த மதம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு என்பவற்றுக்குப் பாதிப்பான வகையில் தீர்மானங்கள் காணப்படுகின்றன எனவும் அப்பீடம் சுட்டிக்காட்டியுள்ளது. வடக்குமற்றும்கிழக்கைஇணைத்து, ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையிலான தீர்மானங்களைஎந்தவகையிலும்அனுமதிக்கமுடியாதுஎனவும்அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போதையில் வீதியில் வீழ்ந்து கிடந்த அமெரிக்கக் கடற்படைச் சிப்பாய்!

கொழும்பு,ஒக்,31

அதிக போதை காரணமாக கொள்ளுப்பிட்டிய பிரதேசத்தில் வீடொன்றுக்கு முன்னால் விழுந்திருந்த அமெரிக்க கடற்படை வீரரொருவரை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த யுத்தக் கப்பலில் பணிபுரியும் இந்த ஊழியர் நேற்று கொள்ளுப்பிட்டிய பிரதேசத்தை பார்வையிடச் சென்றவேளை அதிகமாக மது அருந்தியமையால் போதை எல்லை மீறி விழுந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பின்னர், குறித்த வீரரை பொலிஸார் அமெரிக்க தூதரகத்தின் ஊடாக கடற்படையினரிடம் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அரசமைப்பு சபைக் கூட்டத்தில் அணி தாவினார் துலிப் விஜயசேகரா

நாடாளுமன்றம் நேற்று அரசமைப்புச் சபையாகக் கூடிய சமயம், இதுவரை பிரதி அமைச்சராகப் பணியாற்றிய துலிப் விஜயசேகரா அரசுத்தரப்பிலிருந்து எதிரணிக்குத் தாவினார்.

நேற்று முன்தினம் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட துலிப் விஜேயசேகர, நேற்று அரசமைப்புச்சபைகூடியதும்சுமந்திரன் பேச ஆரம்பித்த போது திடீரென்று குறுக்கிட்டார்.

பௌத்த மத பீடத் தலைவர்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படும் நடவடிக்கைக்குத் தன்னால் இணங்கிப் போக முடியாது என்று கூறிய அவர், கையிலிருந்த புதியஅரசமைப்புக்கானஇடைக்கால அறிக்கையைக்கிழித்துப்போட்டார்.

எழுந்து கூட்டு எதிரணிப் பக்கம் சென்றார். கூட்டு எதிரணியினர் கைதட்டி,ஆரவாரம்செய்துகைலாகு கொடுத்து அவரை வரவேற்றனர்.

"ஆனால், இது நாடாளுமன்ற அமர்வு அல்ல. அரசமைப்புச் சபைக் கூட்டம்தான். செங்கோலின் கீழ் நடக்கும் நிகழ்வு அல்ல. அது கூடத் தெரியாமல் இதனை அணி மாறும் நிகழ்வாக அர்த்தப்படுத்த முயல்வது அறிவீனம்" – என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

(மற்றைய செய்தி20ஆம்பக்கத்தில்)



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காணி அதிகாரப் பகிர்வில் வெறும் பம்மாத்து வேண்டாம்

அதிகாரப் பகிர்வு விடயத்தில் காணி அம்சம் தொடர்பில் உரிய சமயத்தில் அபாயச் சங்கு ஊதப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களே இந்த அபாயத்தை எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

அதிகாரப் பகிர்வைக் கொடுக்கின்ற மாதிரிக் கொடுத்து, எடுக்கின்ற மாதிரி எடுக்கும் தகைமை தென்னிலங்கைச் சிங்களத்தின் பரவணி இயல்பு.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் முன்மொழியப்பட்டு மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பல அதிகாரங்கள் இன்று இல்லை. கொடுப்பது போல கொடுத்து, எடுப்பது தெரியாமல் எடுத்து விட்டார்கள்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின் போது காணி அதிகாரத்தில் அத்தகைய எத்தனம் எடுக்கப்பட்டிருப்பதை கூட்டமைப்பு எம்.பிக்கள் கண்டுபிடித்து கூட்டமைப்புத் தலைமைக்கு எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

காணி அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குங்கள் என்று தமிழர்கள் கோரியபோது வடக்கு, கிழக்கு எங்ஙனும் பரவலாக அரச காணிகள் இருந்தன.

இப்போது காணி அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்குகின்றோம் என்று அரசுத் தரப்பு முன்வருகின்ற போது அங்கு மாகாண சபைகள் கையாள்வதற்கு அரச காணிகளே இல்லை என்ற நிலையை உருவாக்கி விட்டுத்தான் அதற்கு இணங்க முன்வந்திருக்கின்றார்கள்.

முன்னர் கொடுத்து விட்டு எடுப்பார்கள். இப்போது எடுத்து விட்டுக் கொடுக்கின்றார்கள். அவ்வளவுதான் வேறுபாடு.

புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்பதாக ஏதேனும் அரச காணிகள் உரிய தரப்புகளுக்குக் கையளிக்கப்பட்டிருந்தால் அவை குறித்து மாகாண சபை தலையீடு செய்ய முடியாது என்று இடைக்கால அறிக்கை கூறுகின்றது.

ஆனால், புதிய அரசமைப்பு வர முன்னரே வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான அரச காணிகள் சத்தம் சந்தடியின்றி பல்வேறு அரசுக் கட்டமைப்புகளுக்கு உடைமையாக்கப்பட்டுள்ளன.

பெரும் அளவு காட்டுப் பகுதிகளை இரண்டு திணைக்களங்கள் கையகப்படுத்தி விட்டன. ஒன்று வனவளத் திணைக்களம். மற்றையது வன ஜீவராசிகள் திணைக்களம்.

வடக்கு, கிழக்கில் கடற்கரையோரம் உள்ள அனைத்துக் காணிகளும் கடலோரக் காவல் படையின் கட்டுப்பாட்டின் கீழ் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

கனிய வளத் திணைக்களம், சுற்று சூழல் திணைக்களம், புனித பிரதேசங்கள், சிறப்புப் பொருளாதார வலயங்கள், மகாவலி, தொல்பொருள் மையங்கள் என்று வடக்கு, கிழக்கில் உள்ள - மத்திய அரசின் கீழ் செயற்படுகின்ற - பல நிறுவனங்கள், அமைப்புகள், திணைக்களங்கள் இந்த அரச காணிகள் எல்லாவற்றையும் தத்தமதாக அறிவித்துவிட்டன.

நாட்டின் முப்பத்தி மூன்று வீத நிலம் காடுகளாகப் பேணப்பட வேண்டும் என்ற விதிமுறை ஏற்கனவே உள்ளது. தென்னிலங்கைக் காடுகள் பல குடியேற்றங்களாகி விட்டன. அதனைச் சமாளித்து, நாட்டின் காட்டுப் பிரதேச வீதத்தைப் பேணுவதற்காக வடக்கு, கிழக்கில் மக்கள் வாழ்ந்த குடியேற்றப் பிரதேசங்களை எல்லாம் வனம் என்று அறிவிக்கின்றது வனவளத் திணைக்களம் எனும் குற்றச்சாட்டும் உள்ளது.

யுத்தத்தால் மக்கள் இடம்பெயர்ந்ததால் பற்றை பத்திப் போன இடங்களை வனப் பிரதேசம் என்று வனவளத் திணைக்களம் பிரகடனப்படுத்துவதாக விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

போதாக்குறைக்கு பெருமளவு பொது மக்களின் காணிகளும், அரச காணிகளும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் - முழங்காவில் கஜூத்தோட்டம் (சுமார் 2 ஆயிரம் ஏக்கர்), முக்கொம்பன் தென்னந்தோட்டம் (180 ஏக்கர்), முழங்காவில் கடற்படை முகாம் (800 ஏக்கர்), சாந்தபுரம் பண்ணை (590 ஏக்கர்), ஜெயபுரம் சி.எஸ்.டி. பண்ணை (120 ஏக்கர்), மலையாளபுரம் பண்ணை (83 ஏக்கர்), வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பயிற்சிப் பண்ணை (420 ஏக்கர்) -

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் பண்ணை (1800 ஏக்கர்), சன்னார் இராணுவப் பயிற்சி முகாம் (1,480 ஏக்கர்) -

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவில் விமானப்படை சுவீகரித்திருக்கும் நிலம் (3400 ஏக்கர்), வட்டுவாகல் கோட்டாபய முகாம் (680 ஏக்கர்) -

- இப்படி வன்னிக்குள் மட்டும் விவசாய நிலங்கள், கடற்றொழிலுக்கான வள மையங்கள் என்று பெருந்தொகை காணிகள் சுவீகாரம் செய்யப்பட்டு விட்டன.

இனி புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும்போது எஞ்சியிருக்கக் கூடிய சொற்ப காணிகள் மீதான அதிகாரம் என்பது அர்த்தமற்றது.

ஆகவே, மத்திய அரசின் கட்டமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் தாரை வார்க்கப்பட்ட காணிகள் மீதான அதிகாரம் இல்லாத நிலையில் காணி அதிகாரம் பகிரப்படுவதாகக் கூறப்படுவதில் அர்த்தமேயில்லை. அதைக் காணி அதிகாரம் என்று தமிழர்கள் ஏற்றுக் கொண்டு ஏமாந்து போகக் கூடாது.

இதில் தமிழ்க் கூட்டமைப்பு மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டியமை அவசியமாகும்.

# கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை சொந்த மாவட்டங்களிலேயே நியமியுங்கள்

(மன்னார், ஒக்.31)

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களை அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு அல்லது மாகாணங்களுக்கு நியமியுங்கள் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான கே.கே.மஸ்தான் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணனிடம் கே. காதர் மஸ்தான் விடுத்திருக்கும் கோரிக்கையில்.

குறிப்பாக வடமாகாணத்திலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கு நியமிக்கப் பட்டுள்ளமையால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இது ஒருபுறம் இருக்க வட மாகாணத்தில் அதிகமான ஆசிரியப் பற்றாக் குறை நிலவுகின்றமையினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படுவதையும் சுட்டிக்காட்டி இதற்கான தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்படி வேண்டியுள்ளார்.

(இ-112)

# சுதந்திரக் கட்சியின் இன்றைய நிலைப்பாடுதான் மஹிந்த ராஜபக்ஷவின் அன்றைய நிலைப்பாடு!

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு




கொழும்பு, ஒக். 31

புதிய அரசமைப்புத் தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டையே அன்று மஹிந்த ராஜபக்ஷவும் கொண்டிருந்தார் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போதே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தொடர்பாக இன்னமும் இறுதி முடிவொன்று எட்டப்படவில்லை. இது தொடர்பில் சிலர் தவறான கருத்துக்களை தெரிவிக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டின் ஐக்கியத்திற்கு எந்த மாற்றமும் அரசமைப்பில் ஏற்படாது. அதற்கென சட்டபூர்வ ஏற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நீண்டகால பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அரசமைப்பு திருத்தங்களை முன்வைத்துள்ளது. பட்டுள்ளன. அதனால், எவரும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வவுனியா பஸ் நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!



கொழும்பு, ஒக்.31

வவுனியா, பஸ் நிலை யத்தில் 4 கிலோ 96 கிராம் கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த நபர் வவுனியா போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

யாழில் இருந்து தம்புள்ள நோக்கிச் செல்லும் பேஸ்ஸில் பயணித்த இளைஞன் ஒருவரின் செயற்பாட்டில் சந்தேகம் அடைந்த வவு னியா போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவுப் பொலிசார் வவுனியா பஸ் நிலையத் தில் வைத்து அந்த இளை ஞனின் பையினை சோதனை செய்த போது அதில் 4 கிலோ 96 கிராம் கேரள கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் இந்த இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை வவுனியா போதைப் பொருள் தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

# கடலுக்குள் இறங்காதீர்! எச்சரிக்கைப் பலகை




முல்லைத்தீவு, ஒக். 31

முல்லைத்தீவுக் கடற்கரையின் பிரதான இடங்களில் கடலுக்குள் இறங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அபாய எச்சரிக்கை விளம்பரப் பலகைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த அபாய அறிவிப்பு 591 படைப்பிரிவினால் வைக்கப் பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது.

அண்மையில் முல்லைத்தீவு கடலில் குளிக்கச் சென்ற இரண்டு மாணவர்கள் மரணமானதைத் தொடர்ந்து அறிவிப்பு பலகை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

01.11.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.இ. 5.44 வரை
திதி : துவாதசி பி.ப. 3.30 வரை
சுபநேரம் : 04.33 – 12.03 வரை
இராகுகாலம்: 12.03 – 01.33 வரை

# முரண்பாடுகளைத் தீர்ப்பது பௌத்தத்தின் கொள்கை!



கொழும்பு, ஒக். 31

உயிர்ச் சேதங்களுக்கு இடமளிக்காது முரண்பாடுகளைத் தீர்ப்பது பௌத்த கொள்கையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பெப்பிலியான சுநேத்திரா மகாதேவி பிரிவெனா ரஜமகா விகாரையின் கட்டின புண்ணிய நிகழ்வு மற்றும் மாநாட்டு மண்டபத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாகப் புத்தபெருமான் மிகஆழமாகக் கருத்துரைத்துள்ளார். முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு முறைமைகள் இருக்கின்றபோதும் எந்தவோர் உயிர்ச்சேதத்திற்கும் இடமளிக்காதவகையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதே பௌத்த கொள்கையாகும்.

முரண்பாடுகளைத் தீர்ப்பது ஒரு விஞ்ஞானமும் அதே நேரம் கலையுமாகும். இது நவீன உயர்கல்வித்துறையில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. நாம் இன்று முகங்கொடுத்துள்ள முரண்பாட்டுத் தீர்வையும் நன்கு விளங்கி விஞ்ஞான பூர்வமாகவும் கலை அடிப்படையிலும் அதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சங்கைக்குரிய வண. மெதகொட அபயதிஸ்ஸ தேரர் இந்த நிகழ் வில் உரையாற்றியவை வருமாறு:-

நாடு முகங்கொடுத்துள்ள பெரிய சவால்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான பலமும் இயலுமையும் ஜனாதிபதியிடம் உள்ளது.

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

அனைத்து இனங்களினதும் அங்கீகாரத்துடன் தேசிய பிரச்சினைக்குத் தீர்வை வழங்கக்கூடிய தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டுமேயாவார்.

அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து நீண்டநேரம் உமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டேன்.

நீண்டநேரம் மிகவும் அமைதியாகத் தமக்கும் எமது தரப்பினருக்கும் செவிசாய்த்த ஜனாதிபதி இறுதியில் உறுதியாக முன்வைத்த கருத்துக்கள் அவருக்கு இந்த நாட்டைப் பற்றியும் நாட்டு மக்கள் பற்றியும் உள்ள அக்கறையை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டியது.

சுதந்திரம் கிடைத்தது முதல் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்திற்கும் பெரும்பான்மை இனத்திற்குமிடையே பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் அரசியல்வாதிகள் என்றும் அவ்வாறு உருவாக்கப்பட்ட சில அடிப்படைவிதைகள் இன்னும் இருப்பதாகவும் அந்த விதைகளை அகற்றி அனைத்து இனங்களும் ஐக்கியமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது தமது நோக்கமாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலம்சென்ற தமது தாயாரின் நினைவாக மகேல பெரேரா மற்றும் தில்ஷான் விஜேதுங்க ஆகியோரின் அன்பளிப்பில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயிலையும் மற்றும் விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டபத்தையும் இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் நெதிமால பௌத்த கலாசார நிலையத்தின் தலைவர் சங்கைக்குரிய கிரம விமலஜோதி நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும் அமைச்சர் தயா கமகே, பிரதி அமைச்சர் அனோமா கமகே, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, வண. ஜீவன் குமாரதுங்க, ஸ்ரீஜய வர்த்தன பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சம்பத் அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பகுதியில்**

## 145 குடும்பங்களுக்கு நேற்று மாங்கன்றுகள் விநியோகம்



முல்லைத்தீவு, ஒக்.30

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பாள்புரம் கிராம சேவையாளர் பிரிவு மக்கள் மற்றும் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தென்னியன்குளம், உயிலங்குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 141 குடும்பங்களுக்கு தலா 2 - 5 மாங்கன்றுகள் வீதம் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை அம்பாள் புரம் கிராமத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப் பாளர் றோகன கமகே கலந்துகொண்டு மாங்கன்றுகளை வழங்கினார். (இ-81)

---

## மேலும் சில தினங்களுக்கு மோசமான காலநிலை!



கொழும்பு, ஒக். 31

சீரற்ற காலநிலை தொடர்வதால் மலையக பகுதிகளுக்கு தொடர்ந்தும் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படும் சாத்தியம் உள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் இன்று கனமழை பெய்யும் என காலநிலை அவதானி நிலையம் கூறியுள்ளது.

நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மீண்டும் மழைக் காலநிலை நிலவும் நிலையில் அனர்த்தங்களும் பாதிப்புகளும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன எனவும், மலையகத்தில் பல்வேறு பகுதிகளிலும் மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய நிலைமையுள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக, மலையகத்தில் நுவரெலியா, கண்டி மாத்தளை பகுதிகளிலும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மலைபிரதேசங்களில் வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் பாதுகாப்பற்ற இடங்களை விட்டு வேறு இடங்களுக்கு நகருமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.

மேலும், மாவனெல்ல பகுதியில் பெய்துவரும் கன மழை காரணமாக மண்சரிவு எச்சரிக்கை காணப்படுவதை அடுத்து மாவனெல்லை-வேகந்தலா பிரதேசத்தில் இருந்து 17 குடும்பங்களை அகற்றி வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, கேகாலை பகுதியிலும் சில பகுதிகளின் மண் மேடுகள் சரிந்து விழுந்துள்ள நிலையில் உப வீதிகள் சிலமூடப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் நாட்டில் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் கனமழை பெய்து வருகின்றது. சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி அதிகரித்து வருகின்றது.

சில பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்தக் காலநிலை மேலும் சில தினங்கள் நீடிக்கலாம் எனவும் காலநிலை அவதான மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளது.

# பதற்றத்தைத் தணிக்கப் பாதுகாப்பு; இயல்பு நிலையில் மட்டக்களப்பு



மட்டக்களப்பில் வாழைச்சேனை மற்றும் கிரான் ஆகிய இருவேறு இடங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், இயல்பு நிலை வழமைக்குத் திரும்பியுள்ளதுனபொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நேற்று வழமைபோன்று இயல்பு நிலையும், வர்த்தக, தொழில், அலுவலக மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் சுமுகமாக நடந்தன.

வாழைச்சேனை, ஓட்டமாவடி, கிரான் ஆகிய பிரதேசங்களிலும் கல்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்குடா, பாசிக்குடா பிரதேசங்களிலும் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரான், முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, சித்தாண்டி, வந்தாறுமூலை, செங்கலடி மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேசங்களிலும் பொலிஸ் ரோந்து, பாதுகாப்பு, கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வாழைச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் கிரான் வாராந்த சந்தையிலும் வியாபாரம் செய்வது தொடர்பாக தமிழ், முஸ்லிம் மக்களிடையே பதற்றம் ஏற்பட்டிருந்தது. இந்த இரு சம்பவங்களிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக ஒரு சில மணித்தியாலங்கள் ஏற்பட்டிருந்த பதற்றம் சுமுக நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

இன வன்முறைகளைத் தூண்டி விடும் விசம சக்திகளின் அல்லது நபர்களின் செயற்பாடுகள் தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். தொடர்ந்து, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் சுமுக நிலை வழமைக்குத் திரும்பியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சாய்ந்தமருதில் தொடரும் கடையடைப்பு

சாய்ந்தமருது, ஒக்.31

சாய்ந்தமருதுக்குத் தனியான பிரதேச சபை உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் முதல் மூன்று தினங்களுக்கு சாய்ந்தமருதில் கடையடைப்பு போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், சாய்ந்தமருதில் எந்தவொரு கடைகளும் நேற்றைய தினம் திறக்கப்படவில்லை.

சாய்ந்தமருது பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கையை முன்வைத்து இந்தக் கடையடைப்புப் போராட்டத்துக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கடையடைப்புப் போராட்டம் நாளை வரை தொடர்ந்து நடைபெறும் என்றும் தமது கோரிக்கையை அரசு பரிசீலித்து உரிய தீர்வை வழங்கவேண்டும் என்றும் பள்ளிவாசல் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (ப)

## எனது கட்சியில் இணையுங்கள்!



கருணா அழைப்பு

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் இளைஞர்களைத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் அணி திரளுமாறு முன்னாள் பிரதி அமைச்சரும் அந்தக் கட்சியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

தற்போது தமிழர்களுக்குத் தேவை பாதுகாப்பு அரசியலே. தேசிய அரசியலைப் பேசித் தமிழினம் அழியும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது.

தேசியம் கதைக்கும் எந்தத் தமிழனும் இன்று மட்டக்களப்பானைக் காப்பாற்ற முன்வரவில்லை. அதே போன்றுதான் வருகின்ற பிரதேச சபைத் தேர்தலைக் காரணம் காட்டிப் பலர் படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

பதவிக்காகவும் வெறும் அதிகார மோகத்திலும் தான் இன்று உங்கள்முன் வருகின்றார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

பிரதேச சபை தான் எங்கள் கிராமங்களைக் காப்பாற்றக்கூடிய அலகு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதைக் கூறுபோட நீங்கள் அனுமதித்தால் இழப்பைச் சந்திக்கப் போவது நீங்கள்தான். பலர் இன்று சுயேச்சையாகப் போட்டியிடுவதற்கும் திட்டமிடுகின்றார்கள். இவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் அணி திரளுங்கள். தேர்தலுக்கான சிறந்த வியூகத்தை நாம் வைத்துள்ளோம் என்று தெரிவித்தார். (ப)




## தேசிய மரநடுகை நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய மரநடுகை நிகழ்வு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் எஸ்.உதயராஜன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நாவலடி நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எதிர்காலச் சந்ததியினருக்காக 'இயற்கை வளங்களின் முக்கியத்துவமும் அதன் பாதுகாப்பும்' எனும் தொனிப்பொருளில் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன் உரை நிகழ்த்தினார்.

இதன்போது சுற்றாடல் அதிகாரசபையால் பாடசாலைக்குச் சேதனப் பசளை தயாரிக்கும் உபகரணமும் வழங்கப்பட்டது. (ப)

## சாய்ந்தமருதில் பிரதேச சபை அமைவதில் தொடரும் சிக்கல்

அம்பாறை, ஒக்.31

அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது மக்களின் நீண்ட கால கனவான தனியான பிரதேச சபை அமைவதில் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய சாய்ந்தமருதுக்கான பிரதேச சபையை உருவாக்கித் தருமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், பிரதமரின் பணிப்பின்பேரில் சாய்ந்தமருதுப் பிரதேச சபை உருவாக்கப்படவிருந்த சந்தர்ப்பத்தில் பல்வேறு சக்திகளின் தலையீடு காரணமாக அச்செயற்பாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டு தற்போது முற்றாகக் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கல்முனை நகர சபையை இரண்டாகப் பிரித்து சாய்ந்தமருது பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஓர் அரசியல் கட்சி முன்வைத்துள்ளது.

இன்னொரு கட்சியோ கல்முனை நான்காகப் பிரிக்கப்பட வேண்டும் என்றும் அதில் தமிழ் மக்களுக்கான பிரதேச சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளது.

எனினும், கல்முனை நான்காகப் பிரிக்கப்படுகின்றமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேநேரம், கல்முனை மற்றும் சாய்ந்தமருது மக்களும் அவர்களின் சிவில் அமைப்புகளும் இந்த விடயத்தில் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளமையால் நிலைமை மேலும் சிக்கலாகி உள்ளது.

இந்த நிலையில் சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபை என்ற விடயத்தை பிற்போடவழிசெய்யுமாறு அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு நெருக்கமான அரசியல் கட்சி ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

அதனை ஏற்று சாய்ந்தமருது பிரதேச சபை தொடர்பான அறிவித்தல் இல்லாமலேயே வர்த்தமானி அறிவித்தலை வெளியிட அவர் நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ப)

# மஹிந்தவுக்கு மும்பையில் சிறப்புப் பாதுகாப்பு!





கொழும்பு, ஒக். 31

மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகாராஷ்டிரா மாநில அரசின் சிறப்பு கொமாண்டோ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெறும் பௌத்த கலாசார மாநாட்டில் பங்கேற்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை மும்பைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவர் மும்பை விமான நிலையத்தில் தரையிறங் கியதும், QRT எனப்படும் துரித பதிலடிக் குழு (Quick Response Team) சிறப்பு பாதுகாப்பை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மகாராஷ்ரா மாநிலத்தில் உள்ள பழைமை வாய்ந்த குகைச் சிற்பங்கள், ஓவியங்களைப் பார்வையிடச் சென்றிருந்தார்.

இதன் போது, அவருக்கு கியூஆர்ரி கொமாண்டோக்கள் சிறப்பு பாதுகாப்பை வழங்கியுள்ளன.

(க)

## ‘ 2017 – ரணவிரு சுவந்த’ விருது வழங்கும் நிகழ்வு!



கொழும்பு, ஒக். 31

யுத்த வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் இலக்கிய மற்றும் கலைத் திறமைகளைப் பாராட்டும் வகையில் ‘ரணவிரு சுவந்த’ எனும் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது ரணவிரு சேவா அதிகாரசபையின் தலைவி திருமதி அனோமா பொன்சேகாவால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதுடன், கௌரவ அதிதிகளால் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## இலங்கைக்கு வருகிறார் ஆஸ்திரேலிய பிரதமர்!



கொழும்பு, ஒக். 31

ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல் இஸ்ரேலியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இஸ்ரேலுக்கான இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல் நேற்று டெல் அவிவ் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில், ஆஸ்திரேலியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை ஆஸ்திரேலியப் பிரதமர் ரேன்புல் சந்தித்துப் பேசவுள்ளார்.

பொருளாதார உறவுகளை வலுப்படுத்தல், பாதுகாப்பு ஈடுபாடுகள், நாடுகடந்த குற்றங்கள்- குறிப்பாக ஆள்களைக் கடத்தலுக்கு எதிராக இணைந்து செயற்படுதல் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு எதிர்பார்த்திருக்கிறோம் என ஆஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் ஜனநாயக மறுசீரமைப்புக்கு ஒரு கோடியே 40 லட்சம் டொலர் வழங்கிய அமெ.!

கொழும்பு, ஒக். 31

இலங்கையில் ஜனநாயக மறுசீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா ஒரு கோடியே 40 லட்சம் டொலர்களை வழங்கியுள்ளது.

இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றக் குழு முறையை முன்னேற்றுவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரின் ஆற்றலை விருத்தி செய்வதற்குமே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றச் செயற்பாடுகளை நிர்வகிக்கும் நிலையியல் கட்டளைகளை மீளாய்வு செய்தல் தொடர்பாகப் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதுபற்றி அமெரிக்காவில் இருந்த போதும் தாம் கலந்துரையாடல்களை நடத்தினார் எனவும், ஏனைய நாடுகளுடனும் தான் சிறந்த உறவுகளைப் பேணி வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அறிக்கை விவாதத்தை புறக்கணிப்பதாக வீரவன்ஸ அறிவிப்பு!

கொழும்பு, ஒக். 31

நாடாளுமன்றத்தில் நடை பெறவுள்ள அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதத்தில், தேசிய சுதந்திர முன்னணி பங்கேற்காது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள தேசிய சுதந்திர முன்னணி, தமது கட்சியின் 5 உறுப்பினர்களும் அரசமைப்பு பேரவையில் இருந்து விலகிக்கொள்கின்றனர் என அண்மையில் சபாநாயகர் கருஜெயசூரியவிடம் அறிவித்திருந்தது.



அரசமைப்புப் பேரவையாக நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில், இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதங்களில் தேசிய சுதந்திர முன்னணி பங்கேற்காது என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் புதிய அரசமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகளுக்குத் தமது கட்சி ஒரு போதும் ஒத்துழைக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அறிக்கை தொடர்பாக நேற்றுத் தொடங்கி மூன்று நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரசன்ன உள்ளிட்ட 31 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஒக். 31

நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட 31 பேரும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப் பட்ட இந்த சந்தேகநபர்கள் நேற்று மீண்டும் அம்பாந் தோட்டை நீதிவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் கடந்த 06 ஆம் திகதி இடம் பெற்றஆர்ப்பாட்டத்தின்போது, ஏற்பட்ட குழப்பநிலை தொடர் பில் இவர்கள் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

மாகம்புர துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றை வெளிநாடு களுக்கு வழங்குவதற்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் விதமாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டது என்பது குறிப்பி டத்தக்கது.

## தினசரி ராசி பலன் 31.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை. ஏகாதசித் திதி மாலை 6.56 மணிவரை. பின்னர் துவாதசி. நட்சத்திரம் - சதயம் காலை 7.37 மணிவரை. பின்னர் பூரட்டாதி மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 2.50 மணிமுதல் 4.18 மணிவரை.

**சுபநேரம்** - பகல் 10.37 மணிமுதல் 12.08 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசிமாத வளர்பிறை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** சதயம்

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். தெளிவான முடிவுகளை எடுப்பார்கள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். வியாபாரத்தில் வேலையாளர்கள் ஒத்துழைப்பால் மேலதிக லாபம் பெறுவார்கள்.

**ரிஷபம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். செயலில் வேகம் கூடும். ஆன்மீகப் பய ணங்கள் அதிகரிக்கும். புதுவீடு கட்டி குடிபோவார்கள். வாகன யோகம் உண்டாகும்.

**கடகம்** : கவலையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். திடீர் விருந்தினர் வரவால் செலவுகள் அதிகமாகும். குடும்பப் பிரச்சினைகளால் மனக் கவலை உண்டாகும்.

**சிம்மம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். வியாபாரம் லாபமும், நட்டமுமாக நடக்கும்.

**கன்னி** : ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரள மாக இருக்கும். வியாபாரத்தில் வெளியூர் நிறுவனத் துடன் ஒப்பந்தம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும்.

**துலாம்** : நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். சகோதர வகையில் இருந்து வந்த மனத் தாங்கல் நீங் கும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்** : யோசனையான நாள். மனச் சஞ்சலம் அதிகரிக்கும். தன வரவு குறையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கோபம், தாழ்வு மனப்பான்மை உண் டாகும்.

**தனுசு** : மத்திமமான நாள். பண வருவாய் சுமாராக இருக்கும். திடீர் செலவுகள் உண்டாகும். உடல் உபாதை வந்து தீரும். வாழ்க்கைத் துணைவருடன் கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**மகரம்:** அதிர்ஷ்டமான நாள். பண பலம் அதிகரிக்கும். தாய் வழியால் திடீர் அதிஷ்டம் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். வெளிநாட்டுப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**கும்பம்:** அனுகூலமான நாள். நினைத்த காரியம் நிறைவேறும். பொருளாதாரம் வளமாக இருக்கும் பழைய வீட்டை விற்று புது வீட்டை வாங்குவார்கள். உறவினர் நண்பர்களின் சகாயம் கிட்டும்.

**மீனம்** : சலனம் மிகுந்த நாள். மன இறுக்கம் அலைச்சல் உண்டாகும். வருமானம் குறைவடையும். உடலில் ரோகங்கள் உண்டாகும். சிறு சிறு விடயங்களுக்கெல்லாம் உணர்ச்சி வசப்படுவார்கள்.

சந்திராட்டமநாள்: புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# நாடு முன்னோக்கி பயணிக்கின்றது!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 31

நாடு படிப்படியாக பொருளா தார வளர்ச்சியை நோக்கி முன்னோக்கிப் பயணிக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தியின் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட் சிக்காலத்தில் பெறப்பட்ட கடன் தொகையும் படிப்படி யாகச் செலுத்துவதற்கு நட வடிக்கையும் மேற்கொள் ளப்பட்டுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இரத்மலானைஐக்கியதேசிய கட்சியின் அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹிருணிக்கா பிறேமச் சந்திரநியமிக்கப்பட்டமையை தொடர்ந்து இரத்மலானையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே பிரதமர் இந்த விடயங்களைக் குறிப் பிட்டுள்ளார்.

அங்கு பிரதமர் மேலும் உரையாற்றுகையில்-

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் குறிப் பிட்டுள்ளார்.

(க)

## சிறைக் கைதிகள் பரிமாற்றம் தொடர்பில்

# இலங்கை- ஈரான் இடையேயான ஒப்பந்தத்தில் தலதா கைச்சாத்து

கொழும்பு, ஒக். 31

இலங்கை ஜனநாயக சோஷ லிச குடியரசு மற்றும் ஈரான் இஸ்லாமிய குடியரசு நாடு களுக்கிடையில் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக் கைதி களை பரிமாற்றம் செய்து கொள்வது தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத் துக்கு நீதி அமைச்சர் தலதா அத்துகோரள கைச்சாத்திட் டுள்ளார் என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக் கையில் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இலங்கை மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையில் சிறைக்கைதிகளை பரிமாற் றம் செய்து கொள்வது சம்பந் தமாக ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இந்த ஒப்பந்தத்துக்காக



ஈரான் இஸ்லாமிய குடியரசு சார்பில் அந்நாட்டு நீதி அமைச்சர் அலி ராஸா அவாசி அந்நாட்டில் இருந்து கைச் சாத்திட்டுள்ளார். அத்துடன் இலங்கை சார்பில் நீதி அமைச்சர் தலதா அத்து கோரள கைச்சாத்திட்டார்.

அத்துடன், நீதி அமைச்சர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட் டதனையடுத்து இலங்கைக் கான ஈரான் தூதுவர் மொஹ மத் ஸாரி அமிரானி மற்றும் நீதி அமைச்சர் தலதா அத்து கோரள ஆகியோருக்கிடை யில் கைச்சாத்திடப்பட்ட ஒப் பந்தம் பரிமாறிக்கொள்ளப் பட்டது.

இதேவேளை, சிறைக்கை திகளை பரிமாற்றம் செய்து கொள்ளும் இந்த ஒப்பந் தத்தின் மூலம் சிறைக்கைதி களுக்கு விடுதலை கிடைப்ப தில்லை. மாறாக இந்த கைதி களுக்கு விதிக்கப்பட்ட தண் டனையை அதே அடிப்படை யில் தங்களின் தாய் நாட்டில் சிறைச்சாலைகளில் அனு பவிக்க வேண்டிவரும் என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், இந்த ஒப்பந்தம் தொடர்பான ஆரம்பகட்ட பேச்சு கடந்த மாதம் நீதி அமைச்சர் தலதா அத்து கோரள மற்றும் ஈரான் தூது வர் மொஹமட் ஸாரி அமி ரானி ஆகியோருக் கிடையில் இடம்பெற்றது.

## பிரதமர் தலைமையில் மெத்-சந்த செவன மாடி வீட்டுத் தொகுதி திறப்பு!

கொழும்பு, ஒக். 31

மாதம்பிட்டி ஹேமுல்லையில் நிர் மாணிக்கப்பட்ட மெத்-சந்த-செவன மாடி வீட்டுத் தொகுதியின் முதல் கட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பில் குறைந்த வசதிகளுடன் கூடிய நகர்ப்புறப் பிரதேசங்களை ஸ்மாட் நகரங்களாக மாற்றியமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த மாடி வீட்டுத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

77 கோடி ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்டுள்ள இந்த வீட்டுத் தொகுதியில் 219 வீடுகள் காணப்படுகின்றன.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும் இதுதொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இன்றைய அரசியல் நிலை

# தமிழ் பேசும் மக்களுக்கு துரோகப் பாதையில்...!

**மருத்துவமனையில் வைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார்.**

**கேள்வி-** அரசியல் அமைச்சரவை இன்று கூடவிருக்கும் சூழ்நிலையில் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏக்கிய இராச்சிய என்ற சொல் பல விதமான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஒருவிதமான ஒற்றை ஆட்சி என்றே குறித்த சிங்களச் சொல்லிற்கு மொழி பெயர்ப்புக்கள் தரப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக உங்கள் கருத்து என்ன?

**பதில்** - எந்தவிதமான சொல் ஜாலங்களின் ஊடாகவும் நாங்கள் உண்மையை மறைக்கக்கூடாது. ஒற்றை ஆட்சிக்கு இன்னொரு பெயரே ஏக்கிய இராச்சிய. இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வருவதும் ஒற்றை ஆட்சி முறையே. ஒற்றை ஆட்சி முறையைக் கடைப்பிடித்ததால் தான் இந் நாட்டில் இன முரண்பாடுகளும் இனத்துவேசங்களும் இனத்தையொட்டிய நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன.

ஒற்றை ஆட்சி என்று கூறும் போது அல்லது ஏக்கிய இராச்சிய என்று அதற்கு மறு பெயர் வைக்கும்போது அல்லது கபடத்தனமாக ஒருமித்த நாடு என்ற சொல் பாவிக்கப்படும் போது அதன் அர்த்தம் பெரும்பான்மையினருக்கு சொந்தமான நாடு என்பதே. கடந்த 100 ஆண்டுகளில்தான் இவ்விதமான கருத்து மேலோங்கி வந்துள்ளது. உண்மையில் எக்சத் இராச்சிய என்ற சிங்களச் சொல்லுக்கமைவாகவே இந்த நாட்டின் ஆட்சி இருக்க வேண்டும்.

ஐக்கிய ஆட்சிக்கு உட்பட்ட நாடு என்றே இந்த நாடு குறிப்பிடப்பட வேண்டும். ஐக்கிய என்று கூறும் போது பல்வேறு இனங்களையும் உள்ளடக்கி அவ்வவ் இனங்களுக்குரிய சம உரிமையை வழங்கி அவர்களைக் கொண்டு ஏற்படுத்தப்படும் ஓர் அரசியல் முறையே ஐக்கிய ஆட்சி என்ற முறை. இனரீதியாகவோ, மத ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ வெவ்வேறு இனங்களை, மதங்களை, மொழிகளை உள்ளடக்கிய மக்கட் கூட்டங்கள் ஒரே நாட்டினுள் தத்தமக்குரிய உரிமைகளையும், உரித்துக்களையும் பேணிக்கொண்டு தமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமல் சேர்ந்து அமைக்கும் அரசியல் முறையே அதுவாகும்.

**ஆங்கிலேயர் காலத்தில் இல்லாத இன முரண்பாடு**

இலங்கையில் இன முரண்பாடு ஆங்கிலேயர் காலத்தில் இருக்கவில்லை. ஏனென்றால் சகல இனங்களையும் சமமாகப் பாவித்து அவர்களின் பிரதிநிதிகளையேற்று ஆங்கிலேயர்களால் 1919 ஆம் ஆண்டு வரையில் ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. எப்பொழுது பெரும்பான்மை அரசியல் வாதிகளின் கோரிக்கைக்கு அமைய பிரதேச ரீதியாக மக்களைத் தேர்ந்தெடுத்து முழு நாட்டிற்கும் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்த ஆங்கிலேயர்கள் முன்வந்தார்களோ அப்பொழுதுதான் இனமுரண்பாடு ஏற்பட அது வழிவகுத்தது.

எனது தாய் வழி உறவினர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் இதற்கு ஒரு காரண கர்த்தாவாக அமைந்ததை மனவருத்தத்திற்குரியது. ஆனால், சிங்கள அரசியல்தலைவர்களின் கபடத்தை அறியாமல் நம்பிக்கையின் பொருட்டே இவ்வாறானதோர் ஒற்றை ஆட்சி ஏற்பட அவர் காரணகர்த்தாவாக விளங்கினார். ஆங்கிலேயர் எம்மைவிட்டுச் செல்லும் வரை சிங்களத் தலைவர்கள் சிறுபான்மையினருக்கு சம உரித்துக்கள் கொடுத்து ஒரு பெரிய சகோதரன் போன்று அவர்களை அரவணைத்து நாங்கள் நாட்டை நடத்துவோம் என்று கூறி வந்தமையினால்தான் ஆங்கிலேயர்கள் அவர்கள் தந்த முதல் அரசமைப்பில் 29 ஆவது உறுப்புரையில் ஒரேயொரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டு ஒற்றை ஆட்சிக்கு வித்திட்டார்கள்.

ஆனால் ஆங்கிலேயர்கள் நாட்டுக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற மறு வருடமே அத்தனை இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குரிய வாக்குரிமையும் அரசாங்கத்தால் பறிக்கப்பட்டது. 1956 இல் பெருவாரியாக அரசாங்க சேவையில் ஈடுபட்டிருந்த வட கிழக்குத் தமிழ் மக்களின் உரித்துக்களைப் பறிப்பது போன்று சிங்களம் மட்டும் சட்டம் (தனிச்சிங்களச் சட்டம்) கொண்டுவரப்பட்டது.

**சிங்கள மொழி திணிப்பு**

வட கிழக்கானது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பது மறைக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் சிங்கள மொழி திணிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டளவில் கிறிஸ்தவர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த பெருவாரியான தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டன. 1971 ஆம் ஆண்டளவில் கல்வியில் தரப்படுத்தல் என்ற கோட்பாட்டின் கீழ் தமிழ் மாணவ மாணவிகளின் உயர்கல்வி பெரும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டது.

எனவே ஒற்றை ஆட்சியின் மூலமாக பெரும்பான்மையின மக்கள் அதிகாரத்தைத் தம்வசம் பெற்றுக் கொண்டு மற்றைய மக்களுக்கெதிரான பலவிதமான பாதிப்புச் செயல்களிலும் ஈடுபட்டு வந்துள்ளார்கள். அதிகாரம் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கைகளுக்குச் சென்றமையே மற்றைய மக்கள் பாதிப்படையக் காரணமாய் அமைந்தது.



**சிங்கள மக்களின் மூதாதையர் திராவிடரே**

எனவே அவ்வாறான நிலைமை தொடர்ந்து இருந்தால் இந்த நாடு பெரும்பான்மை மக்களின் நாடு என்றாகிப் பெரும்பான்மை மதத்தையும், பெரும்பான்மை மொழியையும் சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை அது ஏற்படுத்தும். பெரும்பான்மையினர் தாமாக முன்வந்து தருவதை மட்டுமே மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

சரித்திர ரீதியாக இவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதற்கு காரணங்கள் இருந்தனவா என்று ஆராய்வோம். சிங்கள மொழி ஒரு மொழியாக நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது கிறிஸ்துவுக்குப் பின் 6 ஆம் நூற்றாண்டளவிலேயே. அதற்கு முன்னர் சிங்கள மொழி இந்த நாட்டில் இருக்கவில்லை. அது ஜனிக்கவில்லை. சிங்கள மொழியானது பாளிச் சொற்களைப் பெரும்பான்மையாகவும் தமிழ்ச் சொற்களை சுமார் 40 வீதமாகவும் வேடர் மொழி போன்ற நாட்டுப்புற மொழி வழக்குகளையுந் தன்வசமடக்கிய மொழி. அண்மைய மரபணுப் பரிசோதனைகள் (DNA) இன்றைய சிங்கள மக்களின் மூதாதையர்கள் திராவிடரே என்று நிச்சயப்படுத்தியுள்ளன.

எனவே, சிங்களவர்கள் தம்மைப் பௌத்தர்களாக அடையாளப்படுத்தக் கூடிய நிலைமை சிங்கள மொழி பிறந்த தன் பின்னரேயே ஏற்பட்டது. அதற்கு முன்னர் பௌத்த மதத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் தமிழ் பௌத்தர்களே. இதைப்பற்றி அண்மையில் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்கள் தெமள பௌத்தயோ என்ற தலையங்கத்தின் கீழ் ஓர் ஆராய்ச்சி நூல் வெளியிட்டிருந்தார். அக்காலத்தில் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்ந்த தமிழ் பேசிய திராவிட மக்களே என்றும் இன்று வட கிழக்கில் காணப்படும் பௌத்த மத எச்சங்கள் அவர்களால் விட்டுச் செல்லப்பட்டவையே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ் பௌத்தர்கள்**

ஆகவே வட கிழக்கு மாகாணங்களில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதில் எவ்வித உண்மையும் இல்லை. தமிழ் பௌத்தர்கள் பல நூற்றாண்டுகள் இங்கு வாழ்ந்து தென்னிந்தியாவிலே நாயன்மார்களின் பக்தி மார்க்கம் வளர்ச்சி அடைந்த போது இங்கும் அதன் எதிரொலியாக பௌத்தர்கள் சைவ சமயத்திற்கு மாறினார்கள். அதாவது முன்னர் சைவ சமயத்தில் ஊறி இங்கிருந்த திராவிட மக்கள் சில நூற்றாண்டுகள் காலமாக பௌத்தத்தைத் தழுவி வாழ்ந்து மீண்டும் சைவ மதத்திற்கே சென்று விட்டார்கள். எனவே வட கிழக்குத் தமிழ் மக்கள் பௌத்த மதத்தை ஏற்றுக் கைவிட்டமையால் அவர்கள் அம் மதத்தை நிராகரித்ததாகவே நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## ஒற்றை ஆட்சியின் இன்னொரு பெயரே 'ஏக்கிய இராச்சிய'

ஏக்கிய இராச்சிய என்ற பெயரின் கீழ் ஒற்றை ஆட்சியை நிலைநிறுத்தி பௌத்தத்தை வட கிழக்கு மாகாணங்களில் திணிப்பது அம் மாகாணங்களைத் தாயகமாகக் கொண்டுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு துரோகத்தை உண்டுபண்ணும் ஒரு செயல் ஆகும். அத்துடன் அவர்களுடைய மனித உரித்துக்களையும், உரிமைகளையும் பறிப்பதாக அமையும். இந் நிலையிலே ஏக்கிய இராச்சிய என்றோ, ஒற்றை ஆட்சி என்றோ, ஒருமித்த நாடு என்றோ பௌத்த சிங்கள மக்களின் ஆதிக்கத்தை இந் நாட்டில் தொடரச்செய்வது இன முரண்பாட்டையும் இன அழிப்பையும் ஓரின, ஒரு மத ஆதிக்கத்தையும் தொடரச்செய்வதாக அமையும்.

**'எக்சத் ரட்ட' என்பதே சிறந்தது**

இந் நாட்டில் இன முறுகல் நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றால் சகல இன மக்களையும் சமமாகக் கருதி அவர்கள் யாவரையும் உள்ளடக்கி ஓர் அரசை நிறுவுவதே பொருத்தமான நடவடிக்கையாகும். அவ்வாறு நிறுவும் போது ஐக்கிய அரசு அல்லது ஐக்கிய நாடு என்ற சொல்லின் கீழ் எக்சத் ரட்ட என்றே குறிப்பிட வேண்டியிருக்கும். அந்த வகையில் சிங்கள மக்களுக்கும், இலங்கையில் வாழ்ந்த பாரம்பரிய தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டு அவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஓர் ஐக்கிய நாடாகவே இலங்கை பரிணமிக்க வேண்டும். இதனால் தான் ஒரு சமஷ்டி அரசை அமைக்க வேண்டும் என்று 1949 ஆம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கட் தலைவர்கள் கூறி வருகின்றார்கள். அதற்கு முன்னர் கண்டிய மக்கட் தலைவர்களும் சமஷ்டி அரசியல் முறையையே விரும்பியிருந்தார்கள்.

உண்மையில் 9 மாகாணங்களுக்கும் சமஷ்டி அடிப்படையில் அலகுகள் நிர்ணயிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் மாகாண அரசுகள் நிறுவப்பட்டு அவற்றை உள்ளடக்கிய ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படலாம். அத்துடன் அவற்றுள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் தேவையெனில் தமக்குள் இணைப்பை ஏற்படுத்த முடியும் என்றும் அதற்கான உரித்து வழங்கப்படலாம்.

முஸ்லிம் மக்கள், சிங்களம் பேசும் முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் என்று வாழ்ந்து இலங்கையில் வருவதனால் அவர்களுக்கென்று அவர்கள் பெருவாரியாகச் செறிந்து வாழும் இலங்கையில் கிழக்கு மாகாணங்கள் போன்ற இடங்களில் குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இனங்கள் யாவும் ஒன்று சேர்ந்தால் ஐக்கிய இலங்கைஎன்றஅரசியல்கொள்கையை நிலை நாட்ட முடியும். எனவே ஐக்கிய இலங்கை என்ற கொள்கை உருவாவதற்குத் தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமது ஆதரவைத் தெரியப்படுத்துதல் அத்தியாவசியம் என்பதை இந்த இடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த விடயத்தில் எமக்குள் மாறுபாடுகள் இருக்கக் கூடாது.

இதனால் பௌத்த சிங்கள மக்கள் தமது அதிகாரங்களைப் பறிகொடுக்கப் போகின்றோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்க முன் வருவார்கள். ஆனால் அவர்கள் ஒரு விடயத்தை மனதில் நிலைநிறுத்த வேண்டும். கபடமாகவும் பொய்யாகவும் ஆங்கிலேயருக்கு உறுதிமொழியை அளித்தே இவ்வாறானதொரு செயற்கை நிலையை சிங்கள அரசியல் தலைவர்கள் இவ்வளவு காலமும் ஏற்படுத்தி வந்துள்ளனர். உண்மை என்னவென்றால் எந்தக் காலத்திலும் இந் நாடு சிங்கள பௌத்த நாடாக இருக்கவில்லை. சிங்கள மொழி வருவதற்கு முன் இருந்தே வடகிழக்குத் திராவிட மக்கள் பௌத்த மதத்தைச் சார்ந்திருந்து அதனைக் காலக்கிரமத்தில் கைவிட்டு இந்து மதத்திற்கு மீண்டும் திரும்பியிருந்தார்கள்.

இவற்றை எங்கள் சிங்கள மக்கள் அறிந்து கொண்டார்களேயானால் அவர்கள் மனோநிலை மாற வாய்ப்பிருக்கின்றது. அதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் இடமளிக்காவிடின் எமது நாட்டின் இன முரண்பாடுகள் மேலும் மேலும் கூர்மை அடைந்து சர்வதேச மட்டத்தில் கரிசனைகளை எழுப்பி அவர்களுக்குப் பெரும் பாதிப்பையும் பெரிய செலவுகளையும் ஏற்படுத்தும் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

இந் நாட்டில் இன முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தோமானால் அடுத்த தினமே பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நாடு மறுமலர்ச்சி அடைந்து பெரும் முன்னேற்றத்தைப் பெறும் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் இருக்க முடியாது. ஆகவே ஏக்கிய இராச்சிய என்ற சொல்லிற்குப் பதிலாக எக்சத் ரட்ட என்ற சொல்லைப் பாவிப்பதே சிறந்தது என்பது எனது கருத்தாகும். ★




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

## கட்டலோன் தன்னாட்சியை ஸ்பெயின் இரத்துச்செய்கிறது

ஸ்பெயின் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணம் கட்டலோனியா பார்சிலோனாவை தலைநகராக கொண்ட, வட கிழக்கு ஸ்பெயினில் வளமான பகுதி.




இங்கு ஸ்பெயின் நாட்டின் மக்கள் தொகையில் 16 சதவீதம் பேர் வசிக்கின்றனர். நாட்டின் ஏற்றுமதியில் 25.6 சதவீத பங்களிப்பை இது பெற்றிருக்கிறது.

ஸ்பெயினின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் இதன் பங்கு 19 சதவீதம் ஆகும். ஸ்பெயினுக்கு வருகிற அந்நிய நேரடி முதலீட்டில் 20.7 சதவீதம் கட்டலோனியாவுக்கு போகிறது. ஸ்பெயினிடம் இருந்து சுதந்திரம் பெற்று தனி நாடாக திகழ வேண்டும் என்ற குரல் அங்கு ஓங்கி ஒலிக்கத்தொடங்கியது.



இதுபற்றி அங்கு கடந்த முதலாம் திகதி பொது வாக்கெடுப்பு நடந்தது. இதில் 42 சதவீத வாக்காளர்கள் வாக்கு அளித்தனர். அவர்களில் 90 சதவீதம் பேர் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மற்றவர்கள் வாக்கெடுப்பை புறக்கணித்தனர். இந்த பொது வாக்கெடுப்பு செல்லாது என ஸ்பெயின் நாட்டின் அரசியல் சாசன நீதிமன்று தீர்ப்பு அளித்தது.

இந்த நிலையில் கட்ட லோனியா நாடாளுமன்றத்தில் சுதந்திர பிரகடனத்தின் மீது அண்மையில் நடந்த வாக்கெடுப்புக்கு ஆதரவாக 70 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் விழுந்தன. 135 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 70 வாக்குகள் ஆதரவாக விழுந்தமையால் சுதந்திர பிரகடனம் நிறைவேறியது.

ஆனால், இதை ஸ்பெயின் அரசு ஏற்கவில்லை.

சுதந்திர பிரகடனம் வெளியிட்ட அடுத்த சில மணித்தியாலங்களில் கட்டலோனியா பிராந்திய தன்னாட்சி அரசை ஸ்பெயின் அரசு கலைத்து உத்தரவிட்டது. இதற்கான ஒப்புதலை ஸ்பெயின் நாடாளுமன்றம் வழங்கியது. இதை ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜோய் தெரிவித்தார்.

இதையடுத்து கட்டலோனியா, ஸ்பெயின் அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்ட அரசிதழ், ஸ்பெயின் துணை பிரதமர் சொராயா சாயின்ஸ் டி சாந்தமரியாவிடம் தரப்பட்டது.



### டிசெம்பரில் தேர்தல்

கட்டலோனியாவில் டிசெம்பர் 21 ஆம் திகதி பிராந்திய தேர்தல் நடத்தப்படும். அதே நேரத்தில் இந்த தேர்தல், கட்டலோனியா பிரச்சினைக்கு தீர்வைத் தேடித்தருமா என தெரியவில்லை. இந்த நடவடிக்கைக்கு, ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டுள்ள அதிபர் கார்லஸ் மற்றும் அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த 12 பேரும் கீழ்ப்படியா விட்டால், அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்பெயின் அரசு எச்சரித்துள்ளது.

### அமெரிக்கா ஆதரவுக் கரம் நீட்டுகிறது

கட்டலோனியா விவகாரத்தில் ஸ்பெயின் நாட்டுக்கு அமெரிக்கா வெளிப்படையான ஆதரவை தெரிவித்துள்ளது.

(WASHINGTON) — The United States says Catalonia is an "integral part of Spain" and that it supports Spanish government efforts to keep the nation "strong and united."

State Department spokeswoman Heather Nauert says the two NATO allies "cooperate closely to advance our shared security and economic priorities."

Nauert said: "The United States supports the Spanish government's constitutional measures to keep Spain strong and united.")

இதுபற்றி அந்த நாட்டின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹெதர் நவார்ட், வொஷிங்டனில் கூறும்போது, கட்டலோனியா, ஸ்பெயின் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி. அந்த நாட்டை அரசியல் சாசனப்படி வலுவானதாகவும், ஒன்றுபட்டதாகவும் திகழச்செய்வதை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று குறிப்பிட்டார்.

The Case Against Catalan Independence BY DANIEL RUNDE

http://foreignpolicy.com SEPTEMBER 18, 2015

The secessionist movement in Spain has been looking for friends in the United States. Republicans and Democrats alike should remember why Spanish unity is a boon for America. Spain has been a great friend of the United States, as both a NATO member and a trade partner. It is a major net contributor to the rule based global order — more than 2000 Spanish troops are involved with numerous UN missions around the world — and spends around $1.5 billion on foreign assistance annually. Spain also has shared interests in improving democracy in Venezuela, largely supports the goals of a full democracy in Cuba, and has been involved on the security side of things in the Sahel. The current Spanish national government has expressed support for the Transatlantic Trade and Investment Partnership (TTIP), a U.S.-European free trade agreement. In short, Spain is a reliable partner of the United States.

**பிரிவு 155 ஐ அமுல்படுத்துவதானது. மட்ரிட் சர்வாதிகாரத்தை நோக்கித் திரும்புவதற்கு ஆழமான எதிர்ப்புக் கொண்டிருக்கின்ற பரந்த கட்டலோன் மக்களுடன் ஸ்பானிய ஆட்சியை ஒரு வன்முறையான மோதலுக்குள் தவிர்க்கவியலாமல் கொண்டு வருவது ஆகும்.**

ஒக்ரோபர் முதலாம் திகதி கட்டலோன் சுதந்திரத்திற்கான கருத்து வாக்கெடுப்பு அன்று நடந்த கொடூரமான பொலிஸ் ஒடுக்குமுறைக்கு மூன்று வாரங்களின் பின்னர், ஸ்பானிய பிரதமரான மரியானோ ரஜோய் கட்டலோனியாவின் பிராந்திய அரசாங்கத்திடம் இருந்து அதன் தன்னாட்சியை பறிக்கின்ற ஸ்பானிய அரசியல் சட்டத்தின் 155 ஆவது பிரிவு கொண்டுவரப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அந்த இடத்தில் ஸ்பானிய இராணுவம், சிவில் காட் துணை இராணுவப் பொலிஸ் மற்றும் பிற பொலிஸ் பிரிவுகளின் துணையுடனான ஒரு தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கத்தை மட்ரிட் அமர்த்த இருக்கிறது.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர்
Kalaikkathir





# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

**142**




## அத்தியாயம் - VIII

## விடுதலைப் போரின் நாயகர்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நாயகர்களாக, பொதுமக்களாலும் போராளிகளாலும் போற்றி மதிக்கப்படும் மூத்த களத் தளபதிகளும் எமது வீட்டுக்கு வருகைதருவதுண்டு. இந்த மூத்த தளபதிகளில் ஒருவர் சூசை. கடற்புலி களின் விசேட தளபதியான சூசை, வடமராட்சியிலுள்ள பொலிகண்டி எனும் கடலோரக் கிராமத்தைப் பிறப் பிடமாகக் கொண்டவர். எனக்கும் பாலாவுக்கும் நெருக்கமானவர். சூசைக்கும் எமக்கும் மத்தியிலான உறவு மிகவும் நீண்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்த வேளை, நாம் வடமராட்சியில் தலை மறைவாக வாழ்ந்த காலத்திலிருந்தே சூசையை எமக்கு நன்கு தெரியும். பிரேமதாசா அரசுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு, 1990 இல் நாம் யாழ்ப்பாணம் திரும்பியபோது மீண்டும் சூசையுடன் தொடர்பைப் புதுப்பித்தோம். கடற்புலிகளின் விசேடதளபதியாகப் பொறுப்பேற்பதற்கு முன்னராக, அவர் வடமராட்சிப் பிரதேசத்தின் தளபதியாகப் பணிபுரிந்தவர். அந்தக் காலத்தில்தான் சூசையின் திருமணத்தை பாலா ஒழுங்குசெய்தார்.

விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவுத் தளபதி என்ற பொறுப்பில் சிறப்புடனும் செல்வாக்குடனும் முன்னேற்றம் அடைந்தார் சூசை. கடற்படைப் பிரிவை கட்டியெழுப்புவதில் அவர் ஈட்டிய வெற்றிகள்தான் அவரது புகழுக்கு காரணம். சூசை பிரபாகரனுக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவர். ஈழப் போரில் கடலாதிக்கத்தின் கேந்திர முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்த பிரபாகரன், தமிழரின் கடற்படையை கட்டியெழுப்புவதில் சூசைக்கு சகல விதமான உதவிகளையும் செய்து வந் தார். பிரபாகரனின் பேரார்வமும், ஆக்க சிந்தனையும், சூசையின் கடின உழைப்பும், நிர்வாகத்திறனும் ஒன்றிணைந்ததால், விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவு, கடற்போரில் ஆற்றல் மிகுந்த சக்தியாக உருவெடுத்து சிறி லங்காவின் கடற்படைக்குப் பெரும் சவாலாக அமைந்தது. சூசையின் தலைமையின் கீழ் செயற்பட்ட கடற்புலிகள், எத்தனையோ கடற் சமர்களில் ஈடுபட்டு, சிங்களக் கடற்படைக் கப்பல்களை பெரும் தொகையில் நாசம் செய்துள்ளனர். அதுமட்டுமன்றி, மிகவும் சாதுரியமான, கேந்திர முக்கியத்துவம்வாய்ந்ததரையிறக்கங்களைச் செய்து, வெற்றிகரமான பல தரைச் சமர்களுக்கும் உதவி புரிந்திருக்கின்றார்கள்.

கடற் சமர் புரிதல், தரையிறக்கம் செய்தல், போராளிகளின் போக்குவரத்துக்கு உதவுதல் போன்ற முக்கிய பணிகளில் ஈடுபட்டுவரும் கடற்புலிகளிடம் ஒரு சிறிய பிரிவுண்டு. இவர்கள் தினமும் ஆழ்கடலில் மீன்பிடித்து, தமது பிரிவிற்கும், பயிற்சி முகாம்களுக்கும் மீன் விநியோகம் செய்வர். இந்த மீன்பிடிப்பால் பயன் பெறுபவர்களில் ஒருவர் பாலா. பாலா வுக்கு மீன் நன்கு பிடிக்கும். அதுவும், உடன் மீன் என்றால் இன்னும் பிடிக்கும். ஒவ்வொரு நாளும் மதிய போசனத்துக்காக, கரையிலிருந்து சூசை அனுப்பி வைக்கும் விதம் விதமான உடன் மீன்களை ரசித்து உண்பார் எனது கணவர்.



சமூகத்தில், எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் இயல்புள்ளவர் என்பதால், சூசை பொதுசனங்கள் மத்தியில் பிரபல்யமானவர். நேர்மையும், பரிவும், பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகும் பண்பும் அவருக்குண்டு. அவருடைய அன்புள்ளமும், தாராள மனப்பான்மையுமே அவரது மனைவியான சுதாவைக் கவர்ந்திருக்க வேண்டும். சூசைக்கும் சுதாவுக்கும் இரண்டு குழந்தைகள். மூத்த பெண் குழந்தையின் பெயர் சிந்து. ஆண் குழந்தையின் பெயர் மணியரசன். யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் நாம் வசித்தபோது, சூசையும் அவரது குடும்பத்தினரும் எமது வீட்டுக்கு அடிக்கடி வருவார்கள். நாமும் அவர்களது வீட்டுக்குச் சென்று வருவோம். அவர்களது வீட்டில் எமக்கு பிரமாதமான விருந்து தருவார்கள். மிகவும் பாசத்துடன் உபசரிப்பார்கள். சுதா, வடமராட்சியிலுள்ள உடுப்பிட்டி என்னுமிடத்தைச் சேர்ந்தவர். விடுதலைப் போராட்டக் களத்தில் முதற் பலியான சங்கரின் (சத்தியநாதன்) சகோதரி. சங்கர் உயிர்நீத்த தினமே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வருடாந்த மாவீரர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது. அன்பும் அமைதியான பண்பும் கொண்ட சுதாவின் குணவியல்பு சூசையின் குடும்பத்தின் சிறப்பியல்பு. குடும்பத்தில், எப்பொழுதுமே அமைதியான ஓர் ஆனந்தத்தைக் காணமுடியும்.

விடுதலைப் போரில் புகழீட்டிய களத் தளபதிகளில் சொர்ணம் முக்கியமானவர். இவரும் எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வார். உயர்ந்த



உருவம். திடகாத்திரமான உடற்கட்டு. சொர்ணத்தின் போராட்ட வரலாறு எண்பதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது. அப்பொழுது அவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவராகப் பணிபுரிந்தார். பிரபாகரனின் மிகவும் நம்பிக்கைக்குரிய உதவியாளர் என்ற தகைமையுடன், சொர்ணம் சென்னையிலுள்ள எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்வார். இந்தியப் படை தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில்தான் சொர்ணத்தின் அபாரமான துணிவும் போர்த் திறனும், நிர்வாக ஆற்றலும் வெளிப்பாடு கண்டன. இதனால் புலிகளின் இராணுவக் கட்டமைப்பில் அவருக்குப் பதவியுயர்வு கிடைத்ததுடன், ஈற்றில் பிரபாகரனின் தனிப்பட்ட பாதுகாப்புக்கும் பொறுப்பாளராக முக்கிய பணியில் அமர்த்தப்பட்டார். இயக்கப் போராளிகளும் சரி, அவரது பொறுப்பதிகாரத்தின் கீழ் பணிபுரிந்த போராளிகளும் சரி, அவருக்கு அன்பையும், மதிப்பையும், மரியாதையையும் சொரிந்தனர்.

போராளிகள் மத்தியில் அவர் பழகும் பொழுது இது வெளிப்படையாகத் தெரியும். களத்தில் முன்நின்று படைநகர்த்த எப்பொதும் தயார் நிலையில் இருக்கும் துணிவு, போரால் எழும் துன்ப, துயரங்களை சுமக்கும் உறுதிப்பாடு, தனது தலைமையின் கீழுள்ள வீரர்களை ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் வைத்திருக்கும் ஆற்றல் ஆகிய பண்புகள் காரணமாகவே சொர்ணம் மீது போராளிகள் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர்.

பல சமர்களில் அவர் மகத்தான வெற்றிகளை ஈட்டியிருக்கிறார். பல தடவைகளில் காயமும் அடைந்திருக்கிறார். பெரிய உருவமும், மென்மையான உள்ளமும் படைத்த இந்த இளம் வீரன், யாழ்ப்பாண சமர் ஒன்றின்போது நெஞ்சில் படுகாயமடைந்து யாழ்ப்பாண மருத்துவமனையில் அவதியுற்றமையைக் கண்டபோது எமக்கு மனவருத்தமாக இருந்தது.

நாம் வலிகாமத்தில் வசித்து வந்தபோது, எமது பாதுகாப்பின் பொறுப்பையும் பிரபாகரன் சொர்ணத்திடம் ஒப்படைத்திருந்தார். பிரபாகரனின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர் பிரிவிலிருந்து, எமது பாதுகாப்புத் தேவைகளுக்காக, போராளிகள் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டு எமது வீட்டில் பணிக்கும் அமர்த்தப்பட்டது. எமது பாதுகாப்புச் சூழ்நிலையைக் கண்காணிக்கவும், எமது மெய்ப்பாதுகாவலர்களான போராளிகளின் தேவைகளைக் கவனிக்கவும், சொர்ணம் எமது வீட்டுக்கு அடிக்கடி வருவார். ஆறடி இரண்டு அங்குல உயரமிருக்கும். கட்டமைப்பான உடல். நேர்த்தியாக சீருடையணிந்த கம்பீரமான தோற்றம். பெரிய இராணுவப் பொறுப்புக்களைச் சுமந்தபோதும், மென்மையாக, எளிமையாகவும் அன்பாகவும் பழகுவார் சொர்ணம்.

(தொடரும்...)

# எவரும் முதலமைச்சர் ஆகிவிடலாம் ஆனால் எதனையும் சாதிக்க முடியாது!

## உடுப்பிட்டியில் நடந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன்






வடமராட்சி, ஒக்.31

வடக்கு மாகாணசபையின் ஆயுட்காலம்முடிவடைவதற்கு இன்னும் ஒரு வருடகாலம் இருக்கின்றது. ஆனால், இப் போதே அடுத்த முதலமைச் சருக்காக யாரை நியமிப்பது என்று பேச ஆரம்பித்து விட் டார்கள். எவரும் முதலமைச்ச ராகலாம். ஆனால், எவர் முதலமைச்சரானாலும், தற் போதுள்ள அரசியலின் கீழ் பெரிதாக எதனையும் சாதித்து விட முடியாது என்று முன்னாள் விவசாய அமைச்சரும் வட மாகாணசபை உறுப்பினரு மான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி வீரகத்தி விநா யகர் சனசமூக நிலையத்தின் பவளவிழாவும் புதிய கட்டடத் திறப்புவிழாவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினருக்கும் ஒவ்வொரு வருடமும் 60 லட்சம் ரூபா குறித்தொதுக்கப்பட்ட அபி விருத்தி நன்கொடை நிதியாக ஒதுக்கப்படுகிறது. இந்நிதியில் இருந்துதான் கட்டுமான உதவிகளைக் கேட்டுவரும் சனசமூக நிலையங்களுக்கும் வாழ்வாதாரம் கேட்டுவரும் பொதுமக்களுக்கும் உதவி களைச் செய்து வருகிறோம். ஆனால், இந்தக் குறைந்தளவு நிதியில் உதவி கோருப வர்களின்தேவையை முழுமை யாக எங்களால் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. அது மாத்திரம் அல்ல, இந்தக் குறைந்தளவு தொகையைக் கூட நாங்கள் விரும்பியமை போன்று எங்களால் வழங்க முடியாமல் உள்ளது.

எனக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு மாணவிக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு சைக்கிளை வழங்கியி ருந்தேன். அந்த மாணவியின் வறுமை நிலையை எடுத்துச் சொல்லி அவருக்கு உதவி செய்யுமாறு கிராமசேவையாளர் ஒருவர் எனக்குப் பரிந்துரைக் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால், அந்த மாணவி நன்றாகப் படிக்கும் மாணவி என்று அதிபரின் பரிந்துரை இல்லாமல் நான் சைக்கிளை வழங்கியமை தவறு என்று கணக்காய்வுக்குழு எங்களிடம் விளக்கம் கேட்டது, பாடசா லையில் வழங்கப்படும் மதிய உணவுதான் வறிய அந்த மாணவிக்கு ஒருநாளில் கிடைக்கக்கூடிய சத்துணவு. பாடசாலை சென்றால்தான் ஒருவேளை உணவுதன்னும் அந்த மாணவிக்குக் கிடைக் கும். அதனால்தான் நான் அந்த மாணவிக்கு சைக்கிளை வழங்கினேன்.

வடக்கு மாகாணசபையின் கையாலாகாத நிலையை விளக்குவதற்கு இந்த ஒரு உதாரணமே போதும். மத்திய அரசாங்கத்தின் சுற்றுநிரு பத்துக்குச் சேவகம் செய்யும் ஊழியர்களாகவே முன்னாள், இன்னாள் அமைச்சர்கள் எல்லோரும் உள்ளோமே தவிர, சுயமாக நாம் எதனையும் செய்ய முடியாதவர்களாகவே உள்ளோம். எனினும் எங்கள் சக்திக்கு மீறிப் பல பணிகளை நாங்கள் முன்னெடுத்திருக் கிறோம். இதனைப் புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்தும் புரியாததுபோல் அரசியல் கார ணங்களுக்காக வடக்கு மாகாண சபை வினைத்திறன் அற்றது என்ற குற்றச்சாட்டுளைப் பலர் முன்வைத்து வருகிறார் கள்.

வடக்கு மாகாணசபை சுயா தீனமாகத் தொழிற்படக் கூடிய வாறு அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படாதவரை மாகாணசபை யால்சிறப்பாகஇயங்கமுடியாது. முதலமைச்சர், அமைச்சர்கள் எல்லோரும் பெயரளவுக்குத் தான் என்பதுதான் யதார்த்தம் என்றும் தெரிவித்துள்ளார்.

(இ)

## போதைப் பொருள் ஒழிப்புவிழிப்புணர்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில்









தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச் சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றும் நாடளாவிய ரீதியில் NO DRUGS நாம் YOUTH எனும் தொனிப் பொருளில் போதைப்பொருள் விழிப் புணர்வு செயலமர்வு இடம்பெற்று அதனூடாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்தி வருகிறது

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளை தெளிவூட்டும் வேலைத் திட்டம் ஒன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ. சுஜிதரன் தலை மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் செல்வி ஆர். ராஜமல்லிகை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சறோஜா குகநேசதாசன், மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ. ஜெயாளன், துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.கந்தன், விரிவுரையாளர்கள் மற்றும் இளை ஞர், யுவதிகள் பலரும் கலந்து கொண்டனர்

(இ-81)







வடமாகாண சபையின் பிரதிஅவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரனுடைய 2017 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனிக்குளம் மு/குமாரசாமி வித்தியாலயத்தி ற்கு ஒலிபெருக்கி உபகரணத்தொகுதியை வழங்கியபோது...

(இ)

# நாட்டுக்கு எதிராகப் போராட்டங்களை தோட்டத் தொழிலாளர் நடத்தவில்லை!


கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்கு எதிராக போராட்டங்கள் பல நடத்தியுள்ளனரே தவிர நாட்டுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தவில்லை என காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் பெருந்தோட்ட சமுதாயத்திற்கு காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாவது கட்டமாக 2,864 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஹட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் கயந்தகருணாதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் உழைக்கும் வர்க்கமான தோட்டத் தொழிலாளர்கள் உலகளாவிய ரீதியில் பெயர் விளங்கும் வகையில் சிலோன் டீ யை உலக சந்தைக்கு அறிமுகம் செய்த பெருமைக்குரியவர்கள்.

இவர்களின் 150 வருட கால வாழ்க்கை முறையில் 5 பரம்பரைகளை கொண்ட இவர்கள் மன உறுதியுடன் செயலாற்றி வருகின்றனர். வீடு மற்றும் காணி உரிமைகள் ஏதும் இன்றி இருந்த இம்மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை நிரூபிக்கும் வகையில் தனி வீடுகளும் காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டமையின் ஊடாக நிரூபணமாகியுள்ளது.

இளம் அமைச்சரான திகாம்பரம் இம்மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழக்கை முறையில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளார்.

ஏனைய சமூகத்துடன் சரிநிகராக மலையக மக்களை வாழவைக்கும் இலக்கினை கொண்டவர் பரம்பரையாக தேயிலை மண்ணுக்கு தமது வியர்வைகளை சிந்தி மாய்ந்து உரமாகவும் ஆக்கப்பட்ட இம்மக்களுடைய வாழ்க்கை முறையில் புதிய ஒளியை ஏற்றுவதற்கு நாட்டின் தலைவரான ஜனாதிபதி மற்றும் பிரதமர் நல்லாட்சி அரசுடன் வித்திட்டுள்ளனர்.

தனக்கு ஒரு நிலம் இல்லை. வீடு இல்லை என வேதனையுடன் தேயிலைச் செடிக்கு மத்தியில் வாழ்ந்த மலையகத்தின் மூதாதையர்கள் கண்ட கனவு இன்று பலித்துள்ளது. அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் இறந்தவர்கள் இந்த வேளையில் சந்தோஷமடைவர்.

வெள்ளையர்களால் நடைமூலமாக அழைத்து வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி சிறந்த மன உறுதியுடன் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

கொக்கோ, கோப்பி, தேயிலை என விவசாய உற்பத்திகளை மேற்கொண்ட இவர்களுள் தேயிலை உற்பத்தி உலகளாவிய ரீதியில் முதல் இடத்தை வைக்கும் நிலையை நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

லயன் காம்பராக்களில் வரிசை வீட்டுக்கு அப்பால் தனி வீடுகளை அமைத்தும் 7 பேர்ச் காணிக்கு உறுதியானவர்களாவும் இன்று மாற்றம் பெற்றுள்ள இவர்கள் கிராம வாழ்க்கையில் கால் அடி எடுத்து வைத்து மாற்று சுய தொழில்களை அவரவர் இடத்தில் கொண்டு செல்லும் நிலைக்கும் ஆளாகியுள்ளனர்.

தொழிலாளர்களின் பிள்ளைகளின் தேயிலை தொழிலில் ஈடுபடுவதை விடுத்து வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டதரணிகள் என உயர் தொழிலை பெற்று எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்துவதுடன் எமது அரசும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தனி வீடும், வீட்டுக்கான நில உரிமையும் இன்று பெற்றதன் ஊடான இந்த நாட்டின் உண்மையான பிரஜா உரிமை பெற்ற மக்களாக சுதந்திரமான வாழ்க்கையை வாழ வழிவகுக்கப் பட்டுள்ளது.

வீட்டு உரிமையை வைத்தும் நில உரிமையை வைத்தும் பல்வேறு அரச தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்து கொள்ள முடியும். வங்கி கடன் பாடசாலைகளுக்கான உறுதி மாடிக்கு மேல் மாடி வீடு என பல நன்மைகளை இவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்!



கொழும்பு, ஒக். 31

முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணி மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கருநாட்டுக் கேணி பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

கருநாட்டுக்கேணி பகுதியில் இருந்து 1983ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்கள் 30 வருடங்களின் பின்னர் மீள் குடியேற்றப்பட்ட போதும் இந்தப் பகுதியில் மீள்குடியேறிய மக்கள் பலர் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் இன்றியும், மின்சார வசதிகள் இன்றியும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன், இந்தப் பகுதி மக்களின் கடற்றொழில் வளங்கள் விவசாய நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கிராம மட்ட பொது அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.



# பௌத்த சங்க சபையால் யாழ். நீதிபதி கௌரவிப்பு!

கொழும்பு, ஒக். 31

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன், சாவகச்சேரி மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் ஆகியோரை உலக பௌத்த இளையோர் சங்கசபை கௌரவித்துள்ளது.

நியாயத்தை நிலைநாட்டுவதற்காக ஆற்றிய சேவை யைப் பாராட்டி உலக பௌத்த இளையோர் சங்க சபை இவர்களை இவ்வாறு கௌரவித்துள்ளது.

கண்டி பல்லேகலயில் உள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த சங்க சபாவின் 14 ஆவது வருடாந்த மாநாட்டில் கௌரவித்து விருதும் வழங்கப்பட்டுள்ளது.

அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க அதிசங்கைக்குரியவண வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் இதனை வழங்கினார்.

56 நாடுகளின் மஹாநாயக் கர்கள், பிக்குகள், பௌத்த தூதுவர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் இந்த மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதாள உலகக் கும்பல்களுடன் எதுவித தொடர்பும் இல்லை!

கொழும்பு, ஒக். 31

பாதாள உலகக் கும்பல்களுடன் தனக்கு எதுவித தொடர்புகளும் இல்லையென்று அமைச்சர் ஜோன் அமரதுங்க திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் அண்மையில் புதையல் ஒன்றைக் கொள்ளையடிக்க முயன்ற சம்பவமொன்றின் போது சுமார் ஏழுவரையான பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்கியுள்ளார்.

இவர் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் தூரத்து உறவினர் என்று கூறப்படுகின்றது.

**ஜோன் அமரதுங்க தெரிவிப்பு**

எனினும், குறித்த மாகாண சபை உறுப்பினருடன் தனக்கு எதுவித உறவுமுறைத் தொடர்புகளும் இல்லை என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க மறுத்துள்ளார்.

அத்துடன், எந்தவொரு பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்களுடனும் தனக்கு தொடர்புகள் இல்லையென்றும் அவர் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நல்லெண்ணத்தின் அடிப்படையில் 68 இந்திய மீனவர்கள் விடுதலை

கராச்சி,ஒக்.31

பாகிஸ்தான் சிறைகளில் உள்ள 68 இந்திய மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லை தாண்டி மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு, அவர்கள் அங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

இரு நாட்டுத் தூதரகங்களும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி நல்லெண்ண அடிப்படையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படுவது வழக்கம்.





இந்த நிலையில், பாகிஸ்தான் சிறைகளில் உள்ள 68 இந்திய மீனவர்கள் நேற்று நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என சிந்து மாகாண உள்துறை அமைச்சக அதிகாரி நசீம் சித்திக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியவை வருமாறு,-

இதற்கான உத்தரவு உள்துறை அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்டுள்ள மீனவர்கள் ரயில் மூலம் லாகூருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அங்கிருந்து வாகா எல்லைக்குக் கொண்டு செல்லப்பட்டு இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, கடந்த ஜூலை மாதம் 78 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் விடுதலை செய்தமை குறிப்பிடத் தக்கது.

(ப)

## வீதியில் குழந்தை பெற்ற பெண்!

### உ.பியில் பரிதாபம்



லக்னோ,ஒக்.31

உத்தரப் பிரதேச மாநிலத்தில் அம்புலன்ஸ் வர தாமதமானதால் கர்ப்பிணிப் பெண்ணிற்கு நடுவீதியில் பிரசவம் பார்க்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவிற்கு அருகில் உள்ள சோனே என்ற கிராமத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் நேற்று முன்தினம் பிரசவ வலியால் அவதியுற்றார். அக்கிராமத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்லப் போக்குவரத்து வசதி இல்லாததால் அம்புலன்ஸிற்கு போன் செய்தனர். அம்புலன்ஸ் வரத் தாமதமானதால் அப்பெண்ணை நடைப் பயணமாகச் சாலைக்கு அழைத்து வந்தனர். அப்போது திடீரென பெண்ணிற்கு அதிக வலி ஏற்பட்டது.

இதையடுத்து, கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் நடு வீதியில் வைத்துப் பிரசவம் பார்த்தனர். சிறிது நேரத்திற்குப் பின் பெண்ணுக்குக் குழந்தை பிறந்தது. குழந்தையை துணியில் சுற்றிப் பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

அம்புலன்ஸ் வர தாமதமானதால் நடுவீதியில் பிரசவம் பார்க்கப்பட்டது அப்பகுதியில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இது போன்று பல கிராமங்களில் உரிய போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி இல்லாமல் மக்கள் அவதியுற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய ராணுவத்துக்கு ஆயுதங்கள் 40 ஆயிரம் கோடி ரூபா செலவில்!

இந்திய இராணுவத்துக்கு 40 ஆயிரம் கோடி ரூபா செலவில் நவீன ஆயுதங்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துக்குத் தேவையான கணிசமான ஆயுதங்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து அதிக அளவில் ஆயுதங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. சமீபத்தில் மாநாடு ஒன்றில் பேசிய இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன், இராணுவத்தை நவீனப் படுத்தப்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், இராணுவத்தின் போர்திறனை மேம்படுத்துவதற்கு இடையூறாக உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், டில்லியில் நடைபெற்ற இராணுவ நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய



இராணுவத் தலைமைத் தளபதி பிபின் ராவத், இந்திய இராணுவம் நவீனப்படுத்தப்படும் என்றும், எல்லைப் பகுதிகளைக் கண்காணிக்க நவீன சாதனங்கள் வாங்கப்படும் என்றும் கூறினார்.

அவர் கூறியபடி, இராணுவத்தில் ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் ஆயுதங்களுக்குப் பதிலாக நவீன ஆயுதங்களை வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கின்றது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த ஆயுதங்கள் 40 ஆயிரம் கோடி ரூபா செலவில் வாங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## சென்னையில் கொட்டும் மழை பாதிப்படைந்த போக்குவரத்து

சென்னை,ஒக்.31

சென்னையில் பல்வேறு பகுதிகளில் நேற்று அதிகாலையில் இருந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வீதிகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

வட கிழக்குப் பருவ மழை கடந்த வாரம் தொடங்கிய நிலையில் தென் மேற்கு வங்கக் கடலில் தமிழகத்தின் அருகே மேலடுக்கு சுழற்சி உருவானது. அது மேற்கு நோக்கி நகர்ந்து இலங்கை அருகே மையம் கொண்டுள்ளது.



இதன் காரணமாக கன்னியாகுமரி, விருதுநகர், ராமநாதபுரம் உள்ளிட்ட தென்மாவட்டங்களிலும், சென்னை மற்றும் வட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முதல் மழை தீவிரம் அடையும் என்றும் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்றும் சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.



## கொள்ளுப்பேரன் திருமணத்தில் கருணாநிதி

கோபாலபுர இல்லத்தில் தனது கொள்ளுப்பேரனுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி திருமணம் நடத்தி வைத்துள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் நடிகர் விக்ரமின் மகள் அக்ஷிதாவுக்கும், கருணாநிதியின் கொள்ளுப்பேரன் மனு ரஞ்சித்திற்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இவர்களது திருமணம் நவம்பர் முதலாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று கோபாலபுர இல்லத்தில் தலைவர் கருணாநிதி முன்னிலையில் திருமணம் நடைபெற்றது.

# சிரியாவில் தொடரும் மோதல்கள் 50 ஐ.எஸ். உட்பட 73 பேர் சாவு

டமாஸ்கஸ்,ஒக்.31

சிரிய நாட்டில் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் 50 ஐ.எஸ். தீவிரவாதிகள் உட்பட 73 பேர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிரிய நாட்டின் கிழக்கே ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் சில பகுதிகளைக் கைப்பற்ற அந்த நாட்டின் அரசுப் படைகள் உச்சக் கட்டத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களுக்குத் துணையாக அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாட்டின் போர் விமானங்களும் வான்வழித் தாக்குதலை நடத்துகின்றன.

இதுதவிர, சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்தின் ஆட்சியை அகற்ற நடைபெற்று வரும் ஆயுதப் புரட்சி மற்றும் அங்குள்ள போராளிக் குழுக்களுக்கு இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். அங்கு போராளிகள் பிடியில் இருக்கும் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றவும் அரசுப் படைகள் முனைப்புடன் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சிரிய நாட்டின் கிழக்கே உள்ள டேய்ர் எஸ்ஸார் நகரின் முக்கிய பகுதியை மீட்பதற்காகக் கடந்த 24 மணி நேரத்தில் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் 50 ஐ.எஸ். தீவிரவாதிகள் உட்பட 73 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனை அங்கு நடைபெறும் உள்நாட்டுப் போர் நிலைவரங்களைக் கண்காணித்துவரும் பிரிட்டன் நாட்டின் மனித உரிமைகள் குழு இயக்குநர் ரமி அப்தெல் ரஹ்மான் நேற்றுத் தெரிவித்துள்ளார்.







# ஏவுகணைத் தயாரிப்பை நிறுத்தமாட்டோம்

தெஹ்ரான்,ஒக்.31

அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பயந்து ஏவுகணைகள் தயாரிப்பதைக் கைவிட மாட்டோம் என ஈரான் அதிபர் ஹசன் ரவுஹானி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைப் பரிசோதித்ததாக ஈரான் மீது அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இதை மையமாக வைத்து ஐக்கிய நாடுகள் சபை ஈரானுடன் செய்துகொண்ட அணு ஆயுதங்கள் பரவல் தடை தொடர்பான உடன்படிக்கையை ரத்து செய்யப்போவதாகவும் அமெரிக்கா தொடர்ந்து மிரட்டி வருகின்றது.

இந்த நிலையில், அதி நவீன ஏவுகணைகள் தயாரிக்கக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய ஈரான் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதற்கு நன்றி தெரிவித்து நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஈரான் அதிபர் ஹசன் ரவுஹானி, நாங்கள் ஏவுகணைகளைத் தயாரித்து வைத்திருக்கின்றோம்; தயாரித்து வருகிறோம். தொடர்ந்தும் தயாரிப்போம்.




ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சமரசங்களையும், ஒப்பந்தங்களையும் அமெரிக்கா மதிக்கத் தவறுவதுடன் பிறநாடுகளையும் உங்களுக்கு ஆதரவாகத் திரட்டுகிறீர்கள். இதைப்போன்ற போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் மற்ற நாடு களுடன் பேச்சு நடத்துவதையும், ஒப்பந் தங்களை ஏற்படுத்துவதையும் அமெரிக்கா மறந்துவிட வேண்டியதாகிவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கனேடிய பெண்ணுக்கு அமைதிக்கான நோபல்

அணு ஆயுதங்களை ஒழிப்பதற்காகச் சர்வதேச அமைப்புகளுடன் நெருங்கிப் பணியாற்றிய கனேடியப் பெண்ணொருவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

ஹிரோஷிமா அணு குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பியவரும், அணு ஆயுத எதிர்ப்புக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தவருமான 85 வயதுடைய Setsuko Thurlow என்பவருக்கே அமைதிக்கான பரிசு வழங்கப்பட்டுள்ளது.

1945ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேரைக் காவுகொண்ட ஹிரோஷிமா அணு குண்டுத் தாக்குதல் இடம்பெற்றபோது இந்தப் பெண்ணுக்கு 13 வயது. தாக்குதலில் உறவினர்கள், நண்பர்களை இழந்து தவித்துவந்த பெண், 1955ஆம் ஆண்டு திருமணத்தின் பின்னர் ரொரன்ரோவில் குடியேறினார். அந்த நாள் முதல் அவர் உலகளாவிய ரீதியில் ஆயுதப் பரவலை எதிர்த்துப் போராடுவதற்குத் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.



அதன்படி, அணு ஆயுத ஒழிப்புக்காகச் சர்வதேச அமைப்புகளுடன் நெருங்கிப் பணியாற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கட்டலோனியா தனிநாடு கோரிக்கைக்கு எதிர்ப்பு

பார்சிலோனா,ஒக்.31

கட்டலோனியா தனிநாடு கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பார்சிலோனாவில் நேற்று நடைபெற்ற பேரணியில் சுமார் மூன்று லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமாகக் கட்டலோனியா தனிநாடாகப் பிரிவது தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தியிருந்தது. அதற்கு 90 வீத மக்கள் ஆதரவாக வாக்களித்திருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை தனிநாடாக அறிவித்துப் பிரகடனம் செய்தது. ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திர கட்டலோனியா பிறந்துவிட்டதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.




தனிநாடு பிரகடனம் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே கட்டலோனியா நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக ஸ்பெயின் அறிவித்தது. மேலும், கட்டலோனியா நிர்வாகம் ஸ்பெயினின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து கட்டலோனியா நாடாளுமன்றத்தைக் கலைத்து அதை நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த ஸ்பெயின் அரசை எதிர்த்து அமைதியானவழியில் போராடுமாறு தனிநாடு ஆதரவாளர்களுக்கு பியூஇடிமோண்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில், கட்டலோனியா சுதந்திரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஸ்பெயினுக்கு ஆதரவாகவும் கட்டலோனியாவின் பார்சிலோனா நகரில் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியில் சுமார் மூன்று லட்சம் பேர் கலந்துகொண்டனர் எனக் கூறப்படுகிறது. அவர்கள் ஸ்பெயின், ஐரோப்பிய யூனியன் மற்றும் கட்டலோனியாக் கொடிகளைக் கையில் வைத்திருந்தனர். அத்தோடு, ஸ்பெயினுக்கு ஆதரவாக கோஷங்களையும் எழுப்பினர்.

# பாகிஸ்தானால் 3ஆவது ரி–20 தொடரிலும் வெள்ளையடிக்கப்பட்ட இலங்கை அணி




நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்திருக்கும் பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 போட்டியில் 36 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தியிருக்கும் பாகிஸ்தான் மூன்று போட்டிகள் கொண்ட தொடரையும் 3:0 என வெள்ளையடிக்கப்பட்ட வெற்றியுடன் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர் நகரின் கடாபி மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் தலைவர் திசர பெரேரா முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு லாகூரில் வைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி அந்நாட்டிற்குச் சென்று விளையாடும் முதலாவது கிரிக்கெட் போட்டி இதுவாக அமைந்திருந்தது.

இந்தப் போட்டிக்காக இலங்கை அணியில் ஒரு மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அஷான் பிரியஞ்சனுக்குப் பதிலாக சகலதுறை வீரரான சத்துரங்க டி சில்வா இலங்கை அணிக்காக ரி-20 போட்டிகளில் அறிமுகமாகியிருந்தார்.

மறுமுனையில் பாகிஸ்தான் அணி இரண்டு மாற்றங்களுடன் களமிறங்கியது. காயமுற்ற உஸ்மான் கான் மற்றும் அஹ்மட் ஷேசாத் ஆகிய வீரர்களுக்கு பதிலாக உமர் அமீன் மற்றும் மொஹமட் அமீர் ஆகியோர் அணியில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து தமது சொந்த மண்ணில் துடுப்பாட்டத்தைப் பாகிஸ்தான் அணி உமர் அமீன் மற்றும் பக்கார் ஸமான் ஆகியோருடன் ஆரம்பித்திருந்தது. இரண்டு வீரர்களும் சிறப்பான ஆரம்பத்தை பாகிஸ்தான் அணிக்கு வழங்கியிருந்தனர்.

பாகிஸ்தானின் முதல் விக்கெட்டை தில்ஷான் முனவீர கைப்பற்றியிருந்தார். 27 பந்துகளில் 31 ஓட்டங்களைக் குவித்திருந்த பக்கார் ஸமான் பாகிஸ்தானின் முதல் விக்கெட்டாக மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

தொடர்ந்து பாகிஸ்தானின் ஏனைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உமர் அமீன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதில் உதவியிருந்தார். எனினும், இசுரு உதானவின் பந்துவீச்சினால் அவரது சிறப்பான இன்னிங்ஸ் நிறைவடைந்தது. ஆட்டமிழக்கும் போது அமீன் 37 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் 3 பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

இதனையடுத்து சொஹைப் மலிக் காட்டிய அதிரடியோடு பாகிஸ்தான் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அதிரடியாக ஆடிய சொஹைப் மலிக் 24 பந்துகளில் தனது ஆறாவது ரி-20 அரைச்சதத்தோடு 2 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 51 ஓட்டங்களைப் பெற்றார். அத்தோடு பாபர் அசாமும் 34 ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தானுக்கு வலுச்சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் விக்கும் சஞ்சய, இசுரு உதான மற்றும் தில்ஷான் முனவீர ஆகிய வீரர்கள் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றியிருந்தனர்.

தொடர்ந்தும் சவாலான வெற்றி இலக்கான 181 ஓட்டங்களை 20 ஓவர்களில் பெற பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை அணி ஆரம்பத்திலேயே 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியிருந்தது.

எனினும், இந்த நிலையில் மத்தியவரிசை வீரராக களம் நுழைந்திருந்த தசுன் சானக்க சிறிது நேரம் போராட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும் ஏனைய வீரர்கள் எதிர்பார்த்த ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவற 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளை பறிகொடுத்து 144 ஓட்டங்களை மாத்திரம் குவித்துப் போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தனது முதலாவது அரைச்சத்தினை பூர்த்தி செய்த தசுன் சானக்க 36 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்ரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் மொஹமட் அமீர் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ரி-20 போட்டிகளில் தனது சிறப்பான பந்து வீச்சைப் பதிவு செய்திருந்தார். அத்தோடு பாஹிம் அஷ்ரப் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை சுருட்டி தனது அணியின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் தொடர் போன்று ரி-20 தொடரிலும் பாகிஸ்தானினால் வெள்ளையடிக்கப்பட்ட இலங்கை அணிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் இது 16 ஆவது தொடர் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

---

# ரி–20 போட்டிகளில் தென்னாபிரிக்க வீரர் புதிய உலக சாதனை




தென்னாபிரிக்க அணியின் இடது கைத் துடுப்பாட்ட வீரரான டேவிட் மில்லர் ரி-20 சர்வதேசப் போட்டிகளில் அதிகுறைந்த பந்து களில் சதம் கடந்த வீரராக புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள் ளார்.

பங்களாதேஷ் அணிக்கெதிராக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தென்னாபிரிக்காவின் போச்செப்ட்ஸ்ரூம் (Potchefstroom) நகரில் நடைபெற்ற இரண்டாவது ரி-20 போட்டியிலேயே இச்சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

பங்களாதேஷினால் முதலில் துடுப்பாடப் பணிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணி, நல்லதோர் ஆரம்பத்தைக் காட்டியிருந்த நிலையில் ஐந்தாம் இலக்க வீரராக மைதானம் வந்திருந்த டேவிட் மில்லர் வெறும் 35 பந்துகளில் 100 ஓட்டங்களைக் குவித்து இந்தப் புதிய உலக சாதனைக்குச் சொந்தக்காரராக மாறியிருக்கின்றார். இது ரி-20 சர்வதேச போட்டிகளில் அவரது கன்னிச் சதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக 2012 ஆம் ஆண்டில் மில்லரின் சக அணி வீரர் றிச்சர்ட் லேவி நியூசிலாந்து அணிக்கெதிராக 46 பந்துகளில் 100 ஓட்டங்கள் பெற்றிருந்ததே ரி-20 சர்வதேச போட்டிகளில் அதிகுறைவான பந்துகளில் பெற்ற சதமாக முன்னர் பதிவாகியிருந்தது.

ஆரம்பத்தில் ஓட்டமேதுமின்றி காணப்பட்ட நிலையில் மில்லர் ஏற்படுத்தி தந்த பிடியெடுப்பு ஒன்றை பங்களாதேஷ் அணியினர் தவறவிட்டிருந்தனர்.

இந்தத் தவறு அவர்களுக்குப் பின்னர் பெரும் இடையூறாக மாறியது. பவுண்டரி எல்லைகளையே குறிவைத்த மில்லர் மொஹமட் சயிபுத்தீன் வீசிய போட்டியின் 19 ஆவது ஓவரில் தொடர்ச்சியாக ஐந்து சிக்ஸர்களை விளாசியிருந்தார். அத்தோடு அவரது இந்தச் சதத்தில் மொத்தமாக 9 சிக்ஸர்கள் மற்றும் 7 பவுண்டரிகள் அடங்கியிருந்தன.

மில்லர் பங்களாதேஷுக்கு எதிரான இந்த ரி-20 போட்டியில் ஆட்டமிழக்காமல் மொத்தமாக 36 பந்துகளில் 101 ஓட்டங்களைக் குவிக்க, 20 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 224 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் வெற்றி இலக்கான 225 ஓட்டங்களைப் பெற பதிலுக்கு துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 141 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 83 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியிருந்ததுடன், தம்முடைய தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் டெஸ்ட் தொடர் (2:0), ஒரு நாள் தொடர் (3:0) என்பவற்றுடன் சேர்த்து தற்போது ரி-20 தொடரையும் (2:0 ) பறிகொடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சென். பற்றிக்ஸ் அணிகள் இரு பிரிவுகளிலும் சம்பியன்





கொழும்பு சென். ஜோசப் கல்லூரி நாடு முழுவதும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தி 5 பேர் கொண்ட வுட்செல் (Futsal) உதைபந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவு மற்றும் 19 வயதுப் பிரிவுகளில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் வெற்றிபெற்று 2017 ஆம் ஆண்டுக்கான கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

இப் போட்டித் தொடர் கடந்த சனிக்கிழமை கொழும்பு சென். ஜோசப் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

17 வயதுப் பிரிவு போட்டியின் அரையிறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி தேசிய சம்பியனான மருதானை ஸாகிராக் கல்லூரி அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்த நிலையில் 17 வயதுக் குட்பட்டவர்களுக்காக இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, தன்னை எதிர்த்தாடிய நீர்கொழும்பு சென்.மேரிஸ் கல்லூரி அணியை 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக டைனியன், டிலுக்ஷன் மற்றும் சம்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

இதேவேளை, 19 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதிப் போட்டியில் கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி அணியை வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, இறுதிப்போட்டியில் கொழும்பு நாலந்தா கல்லூரி அணியை 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாக திரீசன், அபிசன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர். இப் போட்டித் தொடரில் 36 பாடசாலை அணிகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.



## 8ஆவது முறை பட்டம் வென்ற ரோஜர் பெடரர்

48 ஆவது சுவிஸ் உள்ளரங்க டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் ரோஜர் பெடரர், ஆர்ஜென்டினாவின் டெல் போர்டோவை வீழ்த்திச் சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றார்.

48ஆவது சுவிஸ் உள்ளரங்க டென்னிஸ் தொடர் போட்டிகள் சுவிற்ஸர்லாந்தின் பசேல் நகரில் கடந்த 23ஆம் திகதி தொடங்கின. இத்தொடரில் ரோஜர் பெடரர், மரின் சிலிக், டேவிட் கோஃபின் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் கலந்துகொண்டனர். நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், ஆர்ஜென்டினாவின் ஜூவான் மார்டின் டெல் போர்டோவை எதிர்த்து விளையாடினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதல் செட்டை 7:6 என டெல் போர்டோ கைப்பற்றினார். அதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட பெடரர் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டினார். பெடரர் இரண்டாவது செட்டை 6:4 எனக் கைப்பற்றினார். இதையடுத்து ஆட்டத்தில் விறுவிறுப்பு அதிகரித்தது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செட்டை பெடரர், 6:3 எனக் கைப்பற்றினார். இதையடுத்து 6:7, 6:4, 6:3 என்ற செட் கணக்கில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றார்.

இது அவரது 8ஆவது சுவிஸ் உள்ளரங்க டென்னிஸ் பட்டமாகும். இதற்கு முன்னதாக கடந்த 2006, 2007, 2008, 2010, 2011, 2014, 2015 ஆகிய ஆண்டுகளிலும் பெடரர் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். மேலும் இது பெடரர் வெல்லும் 95ஆவது ஒற்றையர் பட்டமாகும்.

## அவதூறு வழக்கு கெய்ல் வெற்றி

ஆஸ்திரேலியா செய்தி நிறுவனத்திற்கு எதிராகக் கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெய்ல் தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற்றார்.

ஆஸ்திரேலிய செய்தி நிறுவனமான பேர் பேக்ஸ் கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெய்ல் குறித்து தவறான கருத்துகளை வெளியிட்டது. பத்திரிக்கை வெளியிட்ட அறிக்கையில் கிறிஸ் கெய்ல் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தின் போது மேற்கிந்தியத்தீவு அணிக்கு உதவியாக இருந்த பெண்ணிடம் அநாகரீகமாக நடந்து கொண்டார் எனக் குறிப்பிட்டிருந்தது.

இதற்கு கெய்ல் மறுப்புத் தெரிவித்தார். இருப்பினும் அந்த நிறுவனத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் உள்ள பல பத்திரிகைகள் இந்தச் செய்தியை வெளியிட்டன. இதனால் மிகவும் கோபமடைந்த கெய்ல் பேர் பேக்ஸ் நிறுவனம் மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கிற்கு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கிறிஸ் கெய்லிற்கு எதிராக ருசேல் என்ற ஆஸ்திரேலியா பெண் சாட்சி கூறினார். ஆனால் அவர் தகுந்த ஆதாரங்கள் வழங்காமையால் இந்த வழக்கு கிறிஸ் கெய்லிற்குச் சாதகமாக முடிவடைந்தது.

''நான் எந்தத் தவறும் செய்யவில்லை. வழக்கில் வெற்றி பெற்றமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.'' - என சிட்னியில் உள்ள உச்ச நீதிமன்ற வளாகத்தில் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.





## கோஹ்லியை விரட்டிய ரசிகர்

நியூசிலாந்துக்கு எதிரான கடைசிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற நிலையில், கோஹ்லியை நோக்கி ரசிகர் ஓடிவந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் கோஹ்லி 113 ஓட்டங்கள் எடுத்தார், அவர் சதமடித்த போது கான்பூர் மைதானமே அதிரும் வகையில் ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர். அப்போது ரசிகர் ஒருவர் ஆர்வ மிகுதியால் கோஹ்லியை நோக்கி மைதானத்துக்குள் ஓடி வந்தார்.

அதனைக் கண்ட காவலதிகாரிகள் நடுவர் இருக்கும் இடத்திலேயே அவரை மடக்கிப் பிடித்தனர். அவர் கோஹ்லி பெயரையும், அவரின் 18 என்ற எண்ணையும் கொண்ட ஜெர்சியை அணிந்து இருந்தார்.

கிரிக்கெட் விதிகளின்படி ரசிகர்கள் இவ்வாறு உள்ளே நுழைகின்றமை குற்றமாகும், அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் மைதானத்தில் சிறிது நேரத்திற்குப் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கோஹ்லியின் புதிய சாதனை

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் இறுதி ஒருநாள் போட்டியில் கோஹ்லி புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

விரைவாக 9 ஆயிரம் ஓட்டங்களை கடந்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸின் சாதனையை கோஹ்லி தற்போது முறியடித்துள்ளார்.

அதாவது டிவில்லியர்ஸ் 205 போட்டிகளில் குவித்த 9 ஆயிரம் ஓட்டங்களை கோஹ்லி 194 போட்டிகளிலேயே எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘சைட்டம்’ நிறுவனம் கலைப்புக்கு மருத்துவர்கள் சங்கம் வரவேற்பு




‘சைட்டம்’ எனும் தனியார் மருத்துவ நிறுவனத்தை கலைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் மதிக்கத்தக்கது எனவும் இருப்பினும், பெயரை மாத்திரம் மாற்றம் செய்யாமல் அதன் தரத்தில் சிறந்த நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நெவில் பெர்னாண்டோ மற்றும் அவரது குடும்பத்துக்குள்ள உரிமையை நீக்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் மதிக்கப்பட வேண்டும். மருத்துவக் கல்வி தொடர்பில் குறைந்த பட்ச தகுதிகள் தொடர்பில் சட்ட ரீதியாக்கப்பட வேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அளுத்கே குறிப்பிட்டுள்ளார்.

‘சைட்டம்’ மருத்துவக் கல்வி முறையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்திருக்கும் இந்த முடிவு மூலம் இதுவரை – கடந்த 11 மாதங்களாக – நிறுத்தப்பட்டிருந்த அனைத்து மருத்துவ பீடங்களின் – கல்வி நடவடிக்கை மீள ஆரம்பமாகும் என நம்பப்படுகிறது.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்று அரசமைப்புச் சபையாக கூடியபோது அங்கு உரையாற்றுகையில் சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இந்த அரசமைப்பு நகல் இப்போது பூர்வாங்க நிலையில் இருந்தாலும் கூட, இப்படி ஓர் அரசமைப்பு உருவாக்க முயற்சியில் தமிழர்களைப் பெரிதும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி ஒன்று நேரடியாகப் பங்களிப்பது இதுதான முதல் தடவை.

இருக்கும் அரசமைப்பு மாற்றப்படும் என்பதை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவும் கூறினார். ஐ.தே.கட்சியும் கூறியது; மஹிந்த ராஜபக்ஷவும் தனது தேர்தல் விஞ்ஞானபனத்தில் தெரிவித்தார்.

அவர் எப்படி அரசமைப்பைக் கொண்டு வருவார் என்று கூறினாரோ அந்த அடிப்படையில் தான் இப்போது அரசமைப்பு கொண்டு வரப்படுகின்றது.

ஆகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைப்படி – 97 வீதமான மக்களின் விருப்பப்படி – இந்த அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது.

13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது இந்த நாடு துண்டாடப்படுகின்றது என்று போராட்டம் நடத்திய மஹிந்த ராஜபக்ஷ பின்னர் தான் ஜனாதிபதியானதும் 13 ஆவது திருத்தத்தையும் தாண்டி அதிகாரப் பரவலாக்கம் செய்வேன் என்றார்.

இப்போது ஒற்றையாட்சி என்று குரல் எழுப்பும் அவரும், 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது சமர்ப்பிக்கப்பட்ட பிரதேசங்களின் ஒன்றியம் என்ற அரசமைப்பை அங்கீகரித்த அமைச்சர்களுள் ஒருவராவார்.

அவர் இப்போது வந்து புதிய அரசமைப்பு வந்தால் நாடு பிளவுபட்டுவிடும் என்று மீண்டும் குரல் எழுப்புகின்றார்.

நாங்கள் அதிக அதிகாரப் பரவலாக்கலுடன் ஒருமித்த நாட்டுக்குள் – பிளவுபடாத நாட்டுக்குள் – ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண முயல்கின்றோம்.

எங்கள் மக்கள் வடக்கு – கிழக்கு இணைந்த தாயகத்தில் – மதச் சார்பற்ற – சமஷ்டி அடிப்படையிலான – தீர்வுக்கு ஆணை தந்தார்கள்.

ஓர் இணக்கமான தீர்வை எட்டுவதற்காக நாம் அவற்றிலும் விட கீழிறங்கி ஒரு தீர்வுக்கு முயற்சிக்கிறோம்.

ஆனால் எமது மக்கள் தாங்கள் தந்த ஆணையை நாம் மீறிவிட்டோம் என எம்மை வைகிறார்கள்.

ஆனால் நாம் இணக்கம் காணக் கூடிய தீர்வை எமது மக்களிடம் எடுத்துச் செல்வோம். அவர்களின் இணக்கத்துடனேயே அதை நாம் முன்னெடுப்போம். நாம் இணங்கும் தீர்வுக்கு அவர்கள் அங்கீகாரம் தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. – என்றார். (உ)

## தம்மைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இனங்காணப்படும் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை இதுவிடயம் தொடர்பாக தாம் நீதிமன்ற விசாரணைகளின்போது முன்னர் வெளிப்படையாக தெரிவித்திருந்தார் எனவும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட 15 பேரில் முன்னாள் புலிகள் அமைப்பின் உறுப்பினர் எமில்காந்தன் உள்ளிட்ட 9 பேரை நீதிமன்றம் விடுதலைசெய்ய உத்தரவிட்டுள்ளது.

## காரைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் மனைவியும் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார். அவர் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (உ)

## மினி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டனர்.

மீட்டியாகொடை மற்றும் தெல்வத்தை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 37 மற்றும் 49 வயதுடைய பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

காலியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த மினிபஸ் ரயில்வேக் கடவையில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரியின் கட்டளையை மீறி பயணித் தமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மினிபஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## இளவாலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்றும் கூறப்பட்டது.

இதனையடுத்து, படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## கூட்டடைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளாகியுள்ளதாகச் சொன்னார்.

தனித்து போட்டியிடுவதற்கான ஆயத்தபணிகளில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் கொள்கை ரீதியான உடன்பாட்டோடு ஏனைய கட்சிகள் இணைந்து போட்டியிட ஆர்வம் செலுத்துமாயின் அதுதொடர்பில் பரீசிலிக்கத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் எனவும் கூட்டமைப்புக்குமாற்றானதலைமை ஒன்று தொடர்பில் அண்மைக் காலமாகத் தான் அவதானம் செலுத்திவருதால் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கூட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியம் பெரும் பாலும் உறுதியளிக்கப்பட்டது.

இந்த மாற்று அணிக்கு தமிழ் மக்கள் பேரவை வெளியில் இருந்து முழு ஆதரவும் வழங்கும் என்றும் –

தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் பல அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் இந்தக் கூட்டுக்கு நேரடியாக ஆதரவு வழங்கும் என்றும் – கூறப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவை இப்போதைக்கு வெளிப்படையாக – நேரடியாக – புதிய கூட்டுக்கு ஆதரவு வழங்காது. ஆனால் பேரவையின் ஒரு பிரிவு அந்த ஆதரவுப் பணியை முழு அளவில் முன்னெடுக்கும் என்றும் கூறப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரில் களமிறங்குவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தரப்பிலும் ஆரம்பத்தில் சில சங்கடங்கள் இருந்த போதும் அவை இப்போது சரி செய்யப்பட்டு விட்டன எனத் தெரிகின்றது.

எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் களமிறங்கினாலும், அதற்குரியதும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கு உரியதுமான சைக்கிள் சின்னத்துக்குப் பதிலாக வேறு சின்னம் ஒன்றை அடையாளம் காணுவது குறித்தும் சம்பந்தப்பட்ட தரப்புகளில் தீவிர ஆலோசனை நடத்தப்படுவதாகத் தெரிகின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற இரண்டுக்குக் குறையாத பதிவுசெய்யப்பட்ட கட்சிகள் அமைக்கும் கூட்டு என்பதால் புதிய சின்னம் ஒன்றை அதற்குப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் இருக்காது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கூட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி உட்பட சில முக்கிய தரப்புகள் சேரலாம் என்றும் கூறப்பட்டது. (உ)

## புலம் பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை.

– இப்படிக் கூறியிருக்கின்றார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மத்தியபிரதேசத்தின் அவுரங்காபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பௌத்த திருவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தென்னிலங்கையில் அடுக்குத் தொடர்மாடிகள் வர்த்தகம் உச்சத்தை எட்டியமைக்கு வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்கள் அந்தத் துறையில் பெருமளவு நிதியைக் கொட்டியமையே காரணம்.

நாட்டில் தனியான தேசம் ஒன்றை உருவாக்குவதற்கு பெரும் யுத்தம் ஒன்று நடத்தப்பட்டுக் கொண்டிருந்த போதும் இவ்வாறு பெரும் தொகைப் பணம் முதலீடு செய்யப்பட்டது.

யுத்த காலத்திலும் வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்கள் வடக்கு, கிழக்கில் முதலிடவில்லை.

கொழும்பில் தொடர் அடுக்குமாடிகள் விலை குறைந்தவையே அல்ல. மேற்கு நாடுகளின் தலைநகரங்களுடன் ஒப்பிடுகையில், அவற்றுக்குச் சமதையாகத் தான் கொழும்பு விலைகள் உள்ளன.

பெரும்பான்மைச் சிங்கள, பௌத்த மக்களின் மத்தியில் வாழ்வது முடியாது என்று தோன்றியிருந்தால் இவ்வளவு பணத்தை அவர்கள் கொழும்பில் முதலிட்டிருக்க மாட்டார்கள்.

தலைநகர் கொழும்பில் பெரும்பான்மையான மக்கள், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் – என்றார் அவர். (உ)

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன கமகே இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினார்.

1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளைச் சந்திப்பதற்காக டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்த சமயமே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அவர் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் புலிகளின் நிதித்துறையில் பணியாற்றிய அன்டனி எமில் லக்ஷ்மி காந்தன் உட்பட 16 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

எமில் காந்தன் உட்பட 9 பேரைக் குற்றச்சாட்டுக்களில் இருந்து முற்றாக விடுதலை செய்ய நீதிபதி தீர்மானித்துள்ளார்.

குற்றவியல் தண்டனை சட்டம் 241க்கு அமைய எமில் காந்தன் உட்பட குற்றம் சுமத்தப்பட்ட பலர் இன்றியே விசாரணைகளை நடத்த மேல் நீதிமன்றம் முடிவு செய்திருந்தது.

வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்க நீதிமன்றம் தீர்மானித்திருந்ததுடன் குற்றத்தை ஒப்புக்கொள்ளாத பொன்னுசாமி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு எதிராக விசாரணைகளை நடத்த நீதிமன்றம் முடிவு செய்தது.

நீதிமன்றத்தில் நேற்று பொன்னுசாமி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

எனினும் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு தான் குற்றவாளி அல்லர் என ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டுள்ளார்.

வழக்கின் இறுதி விசாரணைகளில் 14 ஆவது குற்றவாளியான ஸ்ரீஸ்கந்தராஜா மாத்திரமே நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

இதனால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வரும் ஆறு குற்றவாளிகளையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (உ)

## கைதிகளின் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் சிறையில் தொடர்ந்து உண்ணாவிரதமிருக்கும் மதிராகன் சுலக்ஷன், கணேசன் தர்ஷன் ஆகிய மற்றிருவரின் உடல்நிலையும் மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கைதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தின் தலைவர் நீதியரசர் எல்.ரி.தெல்தெனிய, நீதியரசர் ஏ.எல்.ஷிரான் குணரத்தன ஆகியோர் முன்னிலையிலேயே இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளபபட்டது.

அச்சமயம், மனுதாரர்கள் தரப்பில் சட்டத்தரணியோ அல்லது வேறு பிரதிநிதிகளோ முன்னிலையாகாத நிலையில் விடயத்தை நீதிமன்றம் கையாளாமல் விட்டது.

நேற்றுக்காலை வெளியான வழக்குகளின் பட்டியலில் இந்த விடயம் எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்படவில்லை என்றும் –

அதனால்தான் தங்கள் தரப்பு சட்டத்தரணி அச்சமயம் மன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்றும் –

இந்தக் கைதிகளின் நலனைக் கவனித்து வரும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதேசமயம் புதிதாக விண்ணப்பம் ஒன்றைச் செய்து அடுத்துவரும் நாள்களில் இந்த மனுவை மீண்டும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்புகள் இருப்பதாக சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விசார் மற்றும் கல்விசாரா செயற்பாடுகள் முற்றிலும் ஸ்தம்பிதமடையும் வகையில் பிரதான வளாகத்தின் அனைத்து வெளிப்புறக் கதவுகளும் இழுத்து மூடப் பட் டுள்ளன.

அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த மூன்று அரசியல் கைதிகள், தமது வழக்கை தமிழ் பிரதேச நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இந்தக் கைதிகளின் கோரிக்கைகள் இதுவரையில் நிறைவேற்றப்படாத நிலையில் அவர்களுக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு தழுவிய போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பல்கலைக் கழகத்தில் பருவகாலப் பரீட்சைகள் மற்றும் முக்கியமான நிகழ்வுகள் பலவும் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அவை அனைத்’திற்கும் மத்தியிலேயே இந்தக் கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்புத் தயாரிப்பு; சகல கட்சிகளும் ஒன்றிணைவு

## நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இன்றைய தினம் (நேற்று) வரலாற்று முக்கியத்துவம்மிக்க நாளாகும்.

நாட்டில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து புதிய அரசமைப்பை தயாரிப்பதில் ஒன்றுப்பட்டுள்ளன என்று சபைமுதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட அரசமைப்பு பேரவையின் நடவடிக்கையின் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தை நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இது வரலாற்று முக்கியத்துமிக்க விவாதமாகும். நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அரசமைப்பு 2 நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தேசிய பணியில் ஒன்றிணைந்து ஒரே மேடையில் அமர்ந்து இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் 30 வீதமானோர் தமிழ் மொழி பேசுபவர்களே. இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை முழுமையானது அல்ல; இறுதி அறிக்கையும் அல்ல. ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் பேரவைக்குத் தேவையான வகையில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.

13+ அதிகார பகிர்வை வழங்குவதாகக் கூறினார். இவ்வாறு அதிகாரம் தொடர்பில் குறிப்பிட்டவர் மஹிந்த ராஜபக்ஷவே. இதனை அவர் யுத்தத்திற்கு பின்னர் கூறினார்.

இது மாத்திரம் இன்றி நாடாளுமன்றம் முன்வைக்கும் எத்தகைய தீர்ப்புக்கும் தான் தயார் என்றும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய அரசமைப்பின் தேவையை அவர் வலியுறுத்தியுள்ளார். ஆனால் அவரினால் அதற்கான தெரிவுக் குழுவொன்று நியமிக்க முடியவில்லை. அவரின் தேவைக்காகவே கூறினார். சமகால நல்லாட்சி அரசால் அனைத்து கட்சிகள் ஒன்றிணைந்து பண்பாடு மிக்க அரசியல் குறித்த பேச்சு நடந்து முடிந்துள்ளது.

இந்த இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்திற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனைகள் தொடர்பில் பல்வேறு கருத்து நிலவுகின்றன. ஒற்றையாட்சி எண்ணக்கரு இந்த ஆலோசனையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

சுதந்திரம் கிடைத்த பின்னர் இந்த விடயத்தில் முக்கிய கட்சிகள் ஒன்றிணையாதமையால் 30 வருடகால யுத்தம் இடம்பெற்றது. இரண்டு தரப்பினரும் காலம் தாழ்த்தியே இதனைப் புரிந்து கொண்டுள்ளனர்.

குறுகிய அரசியல் நன்மை கருதி தெரிவிக்கப்படும் கூற்றுக்களை முடிவிற்கு கொண்டுவருவோம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க)



## கேகாலை மாவட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 31

கேகாலை மாவட்டத்தில் மண் சரிவு எச்சரிக்கை நேற்று விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லிலீற்றருக்கு அதிகமாக மழைவீழ்ச்சி காணப்பட்டதால் மேலும் மழை தொடருமாயின் மண் சரிவு, பாறை விழுகை, நிலவெட்டு சாய்வு, மற்றும் தரை உள்ளிறக்கம் என்பவற்றின் காரணமாக பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும் தயார் நிலையில் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை அரனாயக்க பிரதேச செயலக பிரிவு சுற்றுப்புறங்கள் மற்றும் புளத்ஹோபிட்டிய பிரதேச செயலக பிரிவு சுற்றுப்புறங்களிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## பாடசாலையில் தீ விபத்து!

### முக்கிய ஆவணங்கள் சேதம்!

நுவரெலியா, ஒக். 31

நுவரெலியா - கந்தப்பளை, கோட்லோஜ் தமிழ் வித்தியாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாடசாலையின் முக்கிய ஆவணங்களை வைத்திருந்த அறையொன்று முற்றாக பாதிப்படைந்துள்ளது.

இந்த தீ விபத்து நேற்று இடம்பெற்றது. இதே வேளை அந்த விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், விபத்தின் போது அந்த அறையில் களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்த முக்கியமான ஆவண கோப்புக்கள் சேதமடைந்துள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தை தொடர்ந்து மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் பாடசாலைக்கு நேரில் விஜயமொன்றை மேற்கொண்டு தீ விபத்து ஏற்பட்ட பகுதியைப் பார்வையிட்டுள்ளார்.

இதன்போது பாடசாலை நிர்வாகத்துடன் கலந்துரையாடி சேதமடைந்த அறையைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நுவரெலியா கல்வி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## மென்பானங்களில் சீனியின் அளவை குறைப்பதற்கான வேலைத்திட்டம்!

கொழும்பு, ஒக். 31

மென்பானங்களில் சீனியின் அளவு 6 கிராமிற்கு மேற்பட்டதாக இருக்குமாயின் ஒவ்வொரு கிராமிற்கும் ஒரு ரூபா வீதம் வரி அற விடப்படும் என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு உலக சுகாதார அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2017 தாதியர் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம் பெற்றது.

இதன்போது ஆயிரத்து 400 தாதியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழை அமைச்சர் வழங்கினார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொது மக்கள் மத்தியில் சீனியின் பாவனையை கட்டுப் படுத்துவதற்காக சகல மென்பானங்களும் வகைப்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 70 சதவீதமானோர் உயிரிழந்துள்ளனர்.



2 ஆயிரம் பட்டதாரிகளை பயிற்றுவிக்க கூடிய தாதியர் பீடம் ஒன்று ஜயவர்தனபுர பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மொத்த உற்பத்தியில் சுகாதார சேவைக்கும் கல்விக்குமாக பெரும் தொகை செலவிடப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு சுகாதாரத்திற்காக 235 பில்லியன் நிதி செலவிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதி சுகாதார அமைச்சர் பைசால் காசிம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் அனில் ஜசிங்க மற்றும் சுகாதார அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)



நேற்றுமுன்தினம் இந்தியாவின் மத்தியப் பிரதேசம் அவுங்கராபாத்தில் நடைபெற்ற பௌத்த திருவிழாவில் முன்னாள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம்.



அரசியல் கைதிகளின் விடுதலை கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டபோது...

# சாய்ந்தமருதில் கடையடைப்பு நேற்று முதல் 3 நாள்களுக்கு!

## தனிப் பிரதேச சபை வேண்டி முழு ஊரும் போராட்டத்தில்

(காரைதீவு நிருபர் சகா)

சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேசசபையை வென்றெடுக்கும்முகமாக சமுக பொதுநலஅமைப்புகளால் முன்னெடுக்கப்படும் 3நாள் கடையடைப்பு சத்தியாக்கிரகப்பேராட்டம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

நேற்றிலிருந்து தொடர்ச்சியாக 3 தினங்களுக்கு – அதாவது நாளை புதன்கிழமை வரை சாய்ந்தமருதில் முழுமையான கடையடைப்புப்போராட்டம் நடைபெறவுள்ளது.

தினமும் மக்கள் எழுச்சிப்பொதுக்கூட்டமும் மக்கள் போராட்டமும் இடம்பெறுமென பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஹனிபா மாஸ்டர் தெரிவித்தார்.



சாய்ந்தமருது பள்ளிவாசல் முன் அமைக்கப்பட்டுள்ள பாரிய கூடாரத்தில் பல முக்கியபிரமுகர்கள் அமர்ந்து தொடர்ச்சியான சத்தியாக்கிரகப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள கடைத்தொகுதியின் முன்னாலும் பொதுமக்கள் சத்தியாக்கிரகப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



பள்ளிவாசலில் ஒரே சனக் கூட்டம். பள்ளிவாசல் முன்றலில் அடுப்புமூட்டி தண்ணீர்ப் பானை ஒன்று கொதித்தவண்ணம் காணப்பட்டது. பலவித பதாகைகளும் பள்ளிவாசல் முன் தொங்கிவிடப்பட்டுள்ளன.

சாய்ந்தமருதுஎங்கும்கறுப்பு நிறக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அதேவேளை பல சுலோகங்கள்தாங்கிய பதாதைகள் பரவலாக தொங்கவிடப்பட்டிருந்தன.

'கண்டியும் வேண்டாம்; வன்னியும் வேண்டாம்; உள்ளூர்த்தம்பியும் வேண்டாம் அயலூர்க்குதிரையும் வேண்டாம் எல்லோரும் துரோகிகளே" என்ற பதாதை பலரதும் கவனத்தை ஈர்த்தது.

"உள்ளூராட்சி அமைச்சரே!எல்லைப்பிரச்சினை எதுவுமில்லாத எமக்கு உள்ளூராட்சி சபையை வழங்கு! இப்படி பல சுலோகங்கள் அடங்கிய பதாகைகள் பல இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

நான்கு பிரிப்பு என்பது சூழ்ச்சி; இனியும் ஏமாற வேண்டாம்: துரோகிகளைத் துரத்தியடிப்போம்; தனியாகப் பிரிவதே தனித்துவமான தீர்வு – என்ற சுவரொட்டியை சாய்ந்தமருது மறுமலர்ச்சி மன்றம் ஒட்டியுள்ளது..

இந்தப் போராட்டம் காரணமாக நேற்று சாய்ந்தமருது மாளிகைக்காடு பிரதேசத்திலுள்ள சகல கடைகளும் பூட்டப்படிருந்தன. எந்தவொரு கடையும் திறக்கப்படவில்லை. அனைத்தும் இழுத்து மூடப்படிட்டிருந்தன.

பாடசாலைகள் மாணவர் வரவின்மையால் வெறிச்சோடிக்காணப்பட்டன. ஆக ஆசிரியர்கள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். வங்கிகள் பூட்டப்பட்டிருந்தன. சந்தை இயங்கவில்லை.

சாய்ந்தமருது மாளிகைக்காடு பள்ளிவாசல் தொடர்ச்சியாக நடாத்திய ஆலோசனைக்கூட்டத்தில் இம்முடிவு ஏலவே எடுக்கப்பட்டிருந்தது.

அதனைப் பொதுமக்களுக்கு விளங்கப்படுத்துமுகமாக நேற்று முன்தினம் இரவு பகிரங்கப் பொதுக்கூட்டம் பள்ளிவாசல் தலைவர் அன்ஹாஜ் ஹனிபா மாஸ்டர் தலைமையில் நடைபெற்றது.பல பொதுப்பிரமுகர்கள் சமகால நிலைமையை விளக்கி உரையாற்றினார்கள்.

வீதிநெடுகிலும் பொதுமக்கள் திரண்டிருந்தார்கள். சுமார் 3மணிநேரம் இடம்பெற்ற இத் தெளிவுபடுத்தும் கூட்டத்தில் நேற்றைய கடையடைப்பு பற்றி விரிவாகச் சொல்லப்பட்டது.

கல்முனையை நான்காகப் பிரிப்பதற்கும் அக்குழுவினருக்கும் நாம் உடன்பாடில்லை என்ற கருத்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதுமட்டுமல்லாமல், தனியான பிரதேசசபை அந்தஸ்து கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் எனவும் கூறப்பட்டது.

சாய்ந்தமருதுப் பொதுமக்கள் கட்சிபேதம் மறந்து அனைவரும் ஒருமித்து இதுவிடயத்தில் முழுமூச்சாகச் செயற்படுகின்றமையைக் காணக்கூடியதாயுள்ளது.

# சித்த மருத்துவ மாணவரும் நேற்றுக் கவனவீர்ப்பில்!

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மாணவர்களும் நேற்று கைதடி ஏ–9 வீதியில் கவனவீர்ப்பு போராட்டம்ஒன்றைநடத்தியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 30நாள்களுக்கும்மேலாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையைநிறைவேற்ற கோரியும்இந்தப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முதல் மதியம்வரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது நல்லாட்சி அரசே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோஷங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன் வகுப்புக்களையும் புறக்கணித் துள்ளனர்.



# மீசாலை விபத்தில் யுவதி படுகாயம்

சாவகச்சேரி,ஒக்.31

நேற்றுமாலைமீசாலை மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்தார். அவர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் நடந்து சென்ற யுவதியுடன் மோதியதில் யுவதி கை கால்களில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

26 வயதான – கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த – எஸ்.நிரோஜா என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.மோட்டார் சைக்கிள் செலுத்தி சென்ற 20 வயதான – கொடிகாமத்தைச்சேர்ந்த–எஸ்.ஜந்துயன் சிறு காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ–21)

# பிரதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட துலிப் விஜயசேகர கூட்டு எதிரணிப் பக்கம்!

கொழும்பு,ஒக்.31

நேற்று முன்தினம் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட துலிப் விஜயசேகர நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியபடி கூட்டு எதிரணியாக இயங்கும் குழுவினருடன் இணைந்து, தான் சுயாதீனமாகச் செயற்படப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூலமே தனக்கு இந்த அமைச்சர் பதவி முன்னர் வழங்கப்பட்டது எனத் தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் தமக்குப் போதிய திருப்தி இல்லாமையினால் ஆளும் தரப்பினருக்கும் தனக்கும் இடையில் விரிசல் காணப்பட்டதாகவும், அதன் காரணமாகவே தாம் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தான் சுதந்திரக் கட்சியினூடாக கம்பஹா மாவட்டத்தில் பியகம தேர்தல் தொகுதியில் தனது அரசியல் நடவடிக்கைகளைத்தொடர்ந்தும்மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்த அவர், நேற்றுக் காலை நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் கூட்டு எதிரணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.